# 100 நாள் வேலை திட்டத்தால் விவசாயிகள் பாதிப்பு

ஜி.சுந்தரராஜன்First Published : 29 Jan 2010 05:22:00 AM IST

சிதம்பரம், ஜன. 28: கடலூர் மாவட்டத்தில் குறிப்பாக சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் தாலுகாக்களில் 100 நாள் வேலைத் திட்டத்தால் ஆள்கள் கிடைக்காமல் விவசாயிகள் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

காவிரி டெல்டா கடைமடைப் பகுதியான சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் தாலுகாக்களில் சுமார் 1.25 லட்சம் ஏக்கரில் சம்பா நெல் சாகுபடி செய்துள்ளனர்.

மேட்டூரிலிருந்து தண்ணீர் தாமதமாக திறக்கப்பட்டதால் சாகுபடியை தாமதமாக தொடங்கினர். இந்நிலையில் இந்த ஆண்டு வெள்ளப் பாதிப்பு இல்லாவிட்டாலும் புகையான், இலை சுருட்டுப் புழு உள்ளிட்ட நோய்கள் தாக்குதலில் பாதிக்கப்பட்டு விளைச்சல் பாதியாக குறைந்துள்ளது.

தற்போது மழையில் தலைசாய்ந்துள்ள நிலையில் உள்ள பயிரை இயந்திரம் மூலம் அறுவடை செய்ய முடியாது. ஆள்களை கொண்டுதான் அறுவடை செய்ய முடியும். தற்போது சம்பா நெல் சாகுபடி அறுவடை செய்து வேளையில் சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் தாலுக்காக்களில் 100 நாள் வேலைத் திட்டத்தை கடலூர் மாவட்ட நிர்வாகம் தொடங்கியுள்ளது.

கடலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் அனைத்து ஊராட்சி மன்றத் தலைவர்களையும் 100 நாள் வேலைத் திட்டப் பணிகளை தொடங்க வற்புறுத்தி நெருக்கடி செய்வதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

பல கிராமங்களில் குறிப்பாக ஒரத்தூர் வட்டத்தில் 100 நாள் வேலைத் திட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இதனால் அறுவடைக்கு ஆள் கிடைக்காமல் ஏற்கெனவே தவித்து வரும் விவசாயிகள் தற்போது கொஞ்சம், நஞ்சம் இருந்த ஆள்களையும் 100 நாள் வேலைத் திட்டத்துக்கு கொண்டு சென்று விட்டதால் விவசாயிகள் அறுவடை செய்ய முடியாமல் திணறி வருகின்றனர்.

உளுந்து விதைத்த ஒரு வாரத்துக்குள் சம்பா நெல் அறுவடை செய்ய வேண்டும். தற்போது உளுந்து விதைத்து 15 தினங்களுக்கு மேலாகியும் ஆள்கள் கிடைக்கவில்லை. இதனால் உளுந்து பயிர் சாகுபடியும் விவசாயிகளை பாதிக்கும் நிலை உருவாகியுள்ளது.

இயந்திரமும் கிடைக்காமல், ஆள்களும் கிடைக்காமல் நெல் அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

வேளாண்மை நடைபெறும் காலத்தில் 100 நாள் வேலைத் திட்டத்தை செயல்படுத்தக் கூடாது. வேளாண்மை வேலை இல்லாத காலங்களில்தான் அத்திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்ற அரசின் விதிமுறை உள்ளது.

எனவே  விவசாயிகளின் அறுவடையைப் பாதிக்கும் 100 நாள் வேலைத் திட்டத்தை உடனே நிறுத்தி வைக்குமாறு தமிழக உழவர் முன்னணி மாவட்டத் தலைவர் சி.ஆறுமுகம் கோரிக்கை விடுத்து ஆட்சியருக்கு தந்தி அனுப்பியுள்ளார்.

### வீட்டுமனைகளாக மாறி வரும் விளைநிலங்கள்

ஆர். ஜெயபிரகாஷ்First Published : 29 Jan 2010 05:25:15 AM IST



காஞ்சிபுரம், ஜன. 28:  காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொழிற்சாலை பெருக்கம், நலிந்து வரும் விவசாயம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் விளை நிலங்கள்  வீட்டுமனைகளாக மாறி வருகின்றன.

இம் மாவட்டத்தில் 1.45 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் நெல் விவசாயமும், 7,586 ஹெக்டேர் பரப்பளவில் கரும்பு விவசாயமும், 28, 766 ஹெக்டேர் பரப்பளவில் மணிலா விவசாயமும் நடைபெற்று வந்தது. இவைத் தவிர பருத்தி மற்றும் தோட்டப் பயிர்களும் பயிர் செய்யப்பட்டு வந்தன.

ஆனால், தற்போது தொழிற்சாலைகள் அதிகரிப்பதால் குடியிருப்புகளும் விரிவடைந்து வருகின்றன. இதனால், நன்றாக விவசாயம் நடைபெறும் நிலங்களைகூட அதிக விலை கிடைப்பதால் விவசாயிகள் விற்றுவிடுகின்றனர். வேளாண் தொழிலில் போதிய லாபம் கிடைக்காததே இதற்கு முதல் காரணம் என்கின்றனர். தண்ணீர் பற்றாக்குறை, அதிக விலைக்கு விற்கப்படும் உரங்கள், விதைகள் ஆகியவைதான் காரணம் என்கின்றனர் கிராமப்புற விவசாயிகள்.

விவசாயிகள் பலர் தொடர்ந்து விவசாயம் செய்ய முடியாமல் தங்கள் நிலங்களை ரியல் எஸ்டேட் தொழிலுக்கு விற்று வருகின்றனர். நிலங்களை வைத்துள்ள மேலும் சிலர் தங்கள் நிலங்களை தரிசாக போட்டு வைத்துள்ளனர்.

ஆள் பற்றாக்குறையை சமாளிக்க நவீன தொழில்நுட்ப உத்திகளையும், இயந்திரங்களையும் விவசாயிகள் பயன்படுத்தும் வகையில் அவர்களை தயார் படுத்த வேண்டும். அவர்களுக்கு விவசாய பொறியியல் துறை மூலம் எளிதில் விவசாயம் சார்ந்த கருவிகள் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். கூடுதல் விலை உள்ள கருவிகளை விவசாய கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் கையில் கொடுத்து குறைந்த வாடகையில் விவசாயிகள் இயந்திரங்களை பயன்படுத்தவும் அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். விவசாயத்துக்கு தண்ணீர் பற்றாக்குறை இல்லாமல் தடுக்க ஏரிகளை தூர்வார வேண்டும். மழை பெய்தால் ஏரிக்கு நீர் வரும் வரத்து வாய்க்கால்களையும் தூர்வார வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்துகின்றனர்.

இதுகுறித்து இயற்கை விவசாயிகள் சங்கத்தின் மாநில அமைப்பாளர் தேவராஜன்  கூறியது:

விவசாயிகள் தங்களுக்கு கூடுதல் விளைப்பொருள்கள் விளையும்போது விலைகள் குறைகின்றன. இதை அரசு கட்டுப்படுத்த வேண்டும். விவசாயிகளுக்கு கட்டுபடியாகக் கூடிய விலை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஓரகடம் பகுதியில் மூன்றுபோகம் விளையும் விவசாய நிலங்களை அரசே சிறப்பு பொருளாதார மண்டலம் போன்ற காரணங்களுக்காக எடுத்துள்ளது. நெல் விளையும் நன்செய் நிலங்களை ரியல் எஸ்டேட் வியாபாரத்துக்கு மாற்ற அனுமதிக்கக் கூடாது. சொட்டுநீர்ப் பாசனம் போன்றவற்றுக்கு மானியங்கள் வழங்கும்போது அந் நிறுவனத்தால் விற்கப்படும் பொருள்கள் கூடுதல் விலைக்கு விற்கப்படுகின்றன.

÷இதனால், மானியத்தின் பலன் விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை. தண்ணீர் சிக்கனத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் பிவிசி பைப்புகள் மூலம் பாசனம் செய்யும் விவசாயிகளுக்கும் தொடர்ந்து மானிய விலையில் குழாய்களை வழங்க வேண்டும் என்றார் அவர்.

இது குறித்து மேலும் சில விவசாய ஆர்வலர்களிடம் கேட்டபோது விவசாயிகளுக்கு செம்மை நெல் சாகுபடி போன்ற நவீன விவசாய யுக்தியுடன் பல்வேறு பயிற்சிகளையும் அரசு அளிக்க வேண்டும். விளைப் பொருள்களை பதப்படுத்துவது, சந்தைப்படுத்துவது, விவசாய விளைபொருள்களை உணவுப் பொருள்களாக மாற்றுவது போன்ற தொழில்நுட்ப பயிற்களை விவசாயிகளுக்கு அளிக்க வேண்டும். அதன் மூலம் விவசாயிகள் லாபம் பெற ஏதுவாக இருக்கும். விவசாயத்தில் உரிய லாபம் கிடைத்தாலே விவசாயிகள் தங்கள் விளை நிலத்தை ரியல் எஸ்டேட் தொழிலுக்கு விற்கமாட்டார்கள் என்கின்றனர்.

### மூலிகைப் பயிர்களுக்கும் குறைந்தபட்ச கொள்முதல் விலை: அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம்

First Published : 29 Jan 2010 04:13:56 AM IST



சேலம், ஜன. 28: நெல்,கரும்புக்கு வழங்கப்படுவதைப் போல் மூலிகைப் பயிர்களுக்கும் குறைந்தபட்ச கொள்முதல் விலை நிர்ணயம் செய்யப்படும் என்று வேளாண்மைத்துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தெரிவித்தார்.

சேலத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற மருத்துவப் பயிர்கள் சாகுபடி குறித்த மாநில கருத்தரங்கம், கொள்முதல் விற்பனையாளர்கள் கூட்டமர்வு மற்றும் கண்காட்சி தொடக்க விழாவில் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் பேசியது:

மூலிகைப் பயிர்கள் சாகுபடியில் இப்போது நல்ல லாபம் கிடைத்து வருகிறது. இந்தியாவில் மருத்துவத்திற்கு மூலிகையின் தேவை ஆண்டுக்கு 1.77 லட்சம் டன்னாக உள்ளது. வெளிநாடுகளுக்கு 56 ஆயிரத்து 500 டன் மூலிகை ஏற்றுமதியாகிறது. மொத்தம் 3.20 லட்சம் டன் மூலிகை ஆண்டுதோறும் நமக்குத் தேவைப்படுகிறது.

நமது நாட்டில் சித்தா, ஆயுர்வேத, யுனானி மருத்துவ முறைகளில் ஆண்டுக்கு ரூ.8,800 கோடி மதிப்பிலான வணிகம் நடைபெறுகிறது. உலக அளவில் மூலிகை மருத்துவத்தில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.

தமிழகத்தில் இப்போது சென்னா, குளோரியோசா, கோலியஸ், நித்திய கல்யாணி மற்றும் இதர மருத்துவப் பயிர்கள் சுமார் 10 ஆயிரம் ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன.

நெல், கரும்பு போன்ற பயிர்களுக்கு நிர்ணயம் செய்யப்படுவது போல், மருத்துவப் பயிர்களுக்கும் விவசாயிகளுக்கு கட்டுப்படியாகக் கூடிய விலையை குறைந்தபட்ச கொள்முதல் விலையாக நிர்ணயம் செய்ய திட்டமிட்டுள்ளது.

அந்த விலைக்கு மேல் வெளிச்சந்தையில் விற்கவும், அந்த விலைக்கு குறைவாக வெளிச்சந்தையில் விலை நிர்ணயிக்கப்பட்டால் அவற்றை அரசே கொள்முதல் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது என்றார் அவர்.

### துவரம்பருப்பின் விலை மேலும் சரிவு

First Published : 29 Jan 2010 12:22:40 AM IST



சென்னை, ஜன. 28: துவரம் பருப்பு விலை வியாழக்கிழமை மூட்டைக்கு (100 கிலோ) ரூ. 300 குறைந்து ரூ. 6,700}க்கு விற்பனையானது.

இது கடந்த வாரம் ரூ. 7,000}க்கு விற்பனை செய்யப்பட்டது.

கடந்த 60 நாள்களில் துவரம்பருப்பின் விலை மூட்டைக்கு ரூ. 2,300 சரிந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் வகை துவரம்பருப்பு மூட்டை ரூ. 6,500}ல் இருந்து ரூ. 6,000}ஆகவும், தான்சானியா துவரம்பருப்பு ரூ. 5,500}ல் இருந்து ரூ. 5,200}ஆகவும், அமெரிக்க, கனடா, துருக்கி வகை துவரம்பருப்பு ரூ. 4,300}ல் இருந்து ரூ. 4,200}ஆகவும் குறைந்துள்ளது.

வரும் வாரத்தில் துவரம்பருப்பின் விலை மேலும் விலை குறைய வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். உளுத்தம் பருப்பு மூட்டை ரூ. 6,800}ல் இருந்து ரூ. 6,700}ஆகவும், பர்மா உளுத்தம் பருப்பு ரூ. 6,400}ல் இருந்து ரூ. 6,100}ஆகவும் குறைந்துள்ளது.

முதல் ரக பாசிப் பருப்பு மூட்டை ரூ. 7,800}ல் இருந்து ரூ. 7,700}ஆகவும், 2}ம் வகை பாசிப் பருப்பு ரூ. 7,400}ல் இருந்து ரூ. 7,300}ஆகவும் குறைந்துள்ளது.

மொத்த விலையில் துவரம் பருப்பு விலை சரிவு என்ற "தினமணி' செய்தியைத் தொடர்ந்து சில்லறை விற்பனையிலும் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக முதல்வர் கருணாநிதி உறுதி கூறியிருந்தார்.

மேலும் முதல்வர் உத்தரவுப்படி தமிழகம் முழுவதும் 27.1.2010 முதல் அமுதம் மற்றும் கூட்டுறவு பண்டகசாலைகளில் முதல் ரக துவரம் பருப்பு கிலோ ரூ. 65, 2}ம் ரக துவரம் பருப்பு ரூ. 60 என சில்லறை விற்பனை தொடங்கியது.

இந்த நிலையிலும் தனியார் நிறுவனங்கள் ஒரு கிலோ கொண்ட பாக்கெட் துவரம் பருப்பு மொத்த விலையில் ரூ. 75 வரை விற்பனை செய்கின்றன. அது சில்லறை வியாபாரத்தில் ரூ. 80 முதல் ரூ. 85 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது.

அரிசி விலை குறைவு... தமிழகத்தில் ஆரணி, திருவண்ணாமலை, காஞ்சிபுரம், தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், மதுரை உள்ளிட்ட பகுதிகளில் நெல் அமோகமாக விளைந்துள்ளது. இது தவிர ஆந்திரம் மற்றும் கர்நாடகத்தில் இருந்து தமிழகத்துக்கு அதிக அளவு அரிசி கொண்டு வரப்படுகிறது. இதனால் புதிய அரிசி விலை, கடைகளில் குறைந்துள்ளது. (பழைய விலை அடைப்புக்குள்) மோட்டா ரக பொன்னி அரிசி ஒரு கிலோ ரூ. 18 (ரூ. 20), சிவப்பு பொன்னி ரூ. 20 (ரூ. 22), அதிசய பொன்னி ரூ. 22 (ரூ. 23), பாபட்லா பொன்னி ரூ. 24 (ரூ. 26), வெள்ளை பொன்னி ரூ. 26 (ரூ. 28), இட்லி அரிசி ரூ. 21 (ரூ. 23), பொன்னி பச்சரிசி ரூ. 26 (ரூ. 28), பொங்கல் பச்சரிசி ரூ. 18 (ரூ. 20)}க்கு விற்பனையாகிறது.

25 கிலோ அரிசி சிப்பம் விலை:  அதிசய பொன்னி ரூ. 550 (ரூ. 600), கர்நாடக ஸ்டீம் ரூ. 650 (ரூ. 750), பாபட்லா ரூ. 700 (ரூ. 800), வெள்ளை பொன்னி ரூ. 825 (ரூ. 900).

**விரைவில் கிராம அளவில் பயிர் அறுவடை மதிப்பீடு**

First Published : 29 Jan 2010 06:53:50 AM IST

தஞ்சாவூர், ஜன. 28: தேசியப் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் வருங்காலங்களில் அனைவரும் பயன்பெற கிராம அளவில் பயிர் அறுவடை மதிப்பீடு சோதனை நடத்தப்படவுள்ளதாக தஞ்சாவூர் மாவட்டப் பயிர்க் காப்பீட்டுத் திட்ட ஒருங்கிணைப்பாளர் வ. பழனியப்பன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

இத்திட்டத்தில் தற்போதுள்ள நடைமுறையில் தனிப்பட்ட விவசாயிகளின் பாதிப்புக்கோ, தனிப்பட்ட கிராமத்தின் பாதிப்புக்கோ இழப்பீடு வழங்க வகையில்லை. தஞ்சாவூர் மாவட்டத்தில் 10 முதல் 25 கிராமங்கள் உள்ளிட்ட ஒரு பிர்க்காவில், 10 இடங்களில் வேளாண்மைத் துறை மற்றும் புள்ளியியல் துறை அலுவலர்கள் மேற்பார்வையில் பயிர் அறுவடை சோதனை நடத்தப்படுகிறது.

இச்சோதனையில் கிடைக்கும் மகசூல் விவரத்துடன், அதற்கு முந்தய 3 ஆண்டுகளின் சராசரி மகசூல் ஒப்பிடப்பட்டு, அதனடிப்படையில் ஒவ்வொரு பிர்க்காவுக்கும் இழப்பீடு நிர்ணயிக்கப்படுகிறது. நிகழாண்டில் பயிர் அறுவடைச் சோதனைகள் அரசின் வழிகாட்டுதலுக்குட்பட்டு சிறந்த முறையில் நடத்த, ஆட்சியரின் உத்தரவின் பேரில் மாவட்டம் மற்றும் வட்டார அளவில் கண்காணிப்புக் குழுக்களை நியமித்துள்ளார்.

மாவட்ட அளவில் அனைத்துச் சோதனை வயல்களும் அறுவடை செய்யப்பட்டபின், மாநில வேளாண்மை ஆணையர் மூலம் பயிர்க் காப்பீட்டு நிறுவன சென்னை மண்டல அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டு, பின் தில்லியில் உள்ள தலைமை அலுவலகத்தின் ஒப்புதலோடு வட்டார அளவிலான இழப்பீட்டுத் தொகை நிர்ணயிóகப்படும்.

தற்போது உளுந்துப் பயிறுக்கு கடன்பெறாத விவசாயிகள் பிப்.15, கடன்பெறும் விவசாயிகள் மார்ச் 31 ஆகிய தேதிகளுக்குள் பிரிமியம் செலுத்தி இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம்

## அசூரில் விவசாய சேவை மையம் திறப்பு

First Published : 29 Jan 2010 06:22:22 AM IST

திருச்சி, ஜன. 28: திருச்சியை அடுத்த அசூரில் விவசாய சேவை மையமான "நமது பாரி மையம்" திறப்பு விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

பேட்டைவாய்த்தலை ஈ.ஐ.டி. பாரி சர்க்கரை ஆலையின் கரும்பு விரிவாக்கத் துறைத் தலைவர் ரவிச்சந்திரன் மையத்தை திறந்து வைத்தார்.

துவாக்குடி யூனியன் வங்கி கிளையின் முதுநிலை மேலாளர் நாகராஜ் விவசாய இடுபொருள் விற்பனையைத் தொடக்கி வைத்தார்.

பாரி விரிவாக்கத் துறை அலுவலர் கார்த்திக், அலுவலர்கள் தாமோதரன், தர்மராஜ், சம்பந்தம், இளங்கோ, செல்வக்குமரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கரும்பில் மண் ஆய்வு முதல் மறுதாம்பு வரை அனைத்து விவசாய சேவைகளும் ஒரே இடத்தில் கிடைக்கும் என்றும், கரும்பு விவசாயிகளுக்குத் தேவையான நுண்ணூட்டச்சத்து உரங்கள், களைக் கொல்லி மருந்து, ஊடுபயிர் பசுந்தாள் விதைகள் போன்றவை கிடைக்கும் என்றும் பாரி சர்க்கரை ஆலையின் துணை மேலாளர் கணேஷ் தெரிவித்தார்.

## இலவச கால்நடை மருத்துவ முகாம்

First Published : 29 Jan 2010 03:10:35 AM IST

பவானி, ஜன. 28: கவுந்தப்பாடியில் ஜெயம் பிராணி நல அறக்கட்டளை, கால்நடை நலச்சங்கம் இணைந்து நடத்திய இலவச கால்நடை மருத்துவ முகாம் வேலம்பாளையத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு, கால்நடை நலச்சங்கத் தலைவர் இரா.சின்னச்சாமி தலைமை வகித்தார். கால்நடை பராமரிப்புத்துறை முன்னாள் மண்டல இணை இயக்குநர் என்.அருணாச்சலம் முன்னிலை வகித்தார்.

ஜெயம் பிராணி நல அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் கே.வி.கோவிந்தராஜ் வரவேற்றார்.

முன்னாள் எம்எல்ஏ கே.சி.கருப்பணன், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத் தலைவர் கே.விஸ்வநாதன், இளநிலை ஆராய்ச்சியாளர் ஜி.குருப்பிரியா, கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் வி.தங்கவேலு, இணை இயக்குநர் எஸ்.சந்திரன் ஆகியோர் பேசினர்.

கால்நடை உதவி மருத்துவர்கள் எம்.இளங்கோவன், மோகன்குமார், சாரதா, கோபி வேளாண் அறிவியல் நிலைய கால்நடை தொழில்நுட்ப அலுவலர் எம்.அலமேலு கால்நடை வளர்ப்பு, தீவனப்புல் வளர்ப்பு, நோய் தடுப்பு முறைகள், குடல்புழு நீக்கம், தரமற்ற கால்நடைகளை ஆண்மை நீக்கம் செய்வதன் அவசியம் குறித்து விளக்கியதோடு, சிகிச்சையும் அளித்தனர் (படம்).

இம்முகாமில் 376 மாடுகள், 224 வெள்ளாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. மேலும், 189 கோழிகளுக்கு கோழிக்கழிச்சல் தடுப்பூசியும், 274 வெள்ளாடுகளுக்கு குடல்புழு நீக்கம் செய்யப்பட்டது. பலமுறை கருவூட்டல் செய்தும் சினை பிடிக்காத 18 மாடுகள், 27 எருமைகள் பரிசோதனை செய்யப்பட்டு ஆலோசனையும், சிகிச்சையும் அளிக்கப்பட்டது.

## வேளாண் விஞ்ஞானிகள் கருத்தரங்கு

First Published : 29 Jan 2010 04:48:57 AM IST

பெரியகுளம். ஜன.28: பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும், ராஜஸ்தான் மாநிலம் பிகாநேர் மத்திய வறண்ட நில ஆராய்ச்சி நிலையமும் இணைந்து தேசிய அளவிலான 15-வது வேளாண் விஞ்ஞானிகள் கருத்தரங்கை நடத்தின.

பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கை புதுதில்லி இந்திய வேளாண் ஆராய்ச்சி மைய துணை இயக்குநர் ஹெச்.பி.சிங் துவக்கி வைத்தார். பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் பொன்னுச்சாமி வரவேற்றார். வறண்ட நில பழங்கள் இயக்குநர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் டி.ஏ.மோரா திட்ட அறிக்கையை சமர்ப்பித்தார்.

முனைவர் குமார், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகப் பதிவாளர் சுப்பையன் உள்பட பலர் கலந்து கொண்டனர். இந்தியாவில் 12 சதவிகிதம் அளவிற்கு உள்ள வறண்ட நிலப்பகுதிகளில் நிலவும் அதிக வெப்பமும், குறைந்த மழையளவும், தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தித் திறனை பாதித்தாலும், வறண்ட நிலப்பயிர்களான இலந்தை, பெருநெல்லி, மாதுளை மற்றும் சீதாப்பழம் போன்றவற்றை தர நிர்ணயம் செய்வதற்கு உதவியாக உள்ளது குறித்தும் விளக்கப்பட்டது.

கருத்தரங்கில் இந்தியா முழுவதும் இருந்து 50-க்கும் மேற்பட்ட வேளாண் விஞ்ஞானிகள் கலந்து கொண்டனர். தோட்டக்கலைக் கல்லூரி முனைவர் செல்வராஜன் நன்றி கூறினார். இக் கருத்தரங்கம் 30-ம்தேதி வரை நடைபெறுகிறது.

## கொள்முதல் நிலையங்களை ஆய்வு செய்ய துணை ஆட்சியர்கள் நியமனம்

First Published : 29 Jan 2010 06:55:54 AM IST

திருவாரூர், ஜன. 28: திருவாரூர் மாவட்டத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை ஆய்வு செய்ய துணை ஆட்சியர் நிலையிலான அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றார் மாவட்ட ஆட்சியர் எம். சந்திரசேகரன்.

திருவாரூரில் வியாழக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு பதிலளித்து ஆட்சியர் பேசியது: திருவாரூர் மாவட்டத்தில் நெல் அறுவடைப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. நிகழாண்டில் உளுந்து, பயறு வகைப் பயிர்கள் ஏறத்தாழ 70,000 ஹெக்டேரில் மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரையில் உளுந்து 25,110 ஹெக்டேரிலும், பயறு 16,018 ஹெக்டேரிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உளுந்து, பயறு விதைகளைப் பொறுத்தவரையில் விவசாயிகளுக்குத் தேவையான அளவுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் உடனடியாக தெரிவிக்கலாம்.

தற்போது விவசாயிகளுக்கு உரத்தேவை இருக்காது என்றாலும் தேவையான அளவுக்கு யூரியா, டிஏபி உள்ளிட்ட உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

மாவட்டம் முழுவதும் 320 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, போதுமான அளவுக்கு சாக்கு மற்றும் பொருள்கள் வழங்கப்படுகின்றன. மேலும் கொள்முதல் செய்யப்படும் நெல் உடனடியாக கிடங்குகளுக்கு இயக்கம் செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகள் கொண்டு வரும் நெல்லை தாமதமின்றி கொள்முதல் செய்ய

ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.    நெல் கொள்முதல் நிலையங்களில் முறைகேடுகளைத் தடுக்க துணை ஆட்சியர் நிலையிலான அலுவலர்கள் 7 வட்டங்களிலும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த அலுவலர்களும் அவ்வப்போது கொள்முதல் நிலையங்களைப் பார்வையிட்டு, ஆய்வு செய்வார்கள் என்றார் ஆட்சியர்.

## கொள்முதல் நிலைய முறைகேடுகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

First Published : 29 Jan 2010 06:55:36 AM IST

திருவாரூர், ஜன. 28:   சம்பா, தாளடி அறுவடைப் பணிகள் தொடங்கியுள்ள நிலையில், கொள்முதல் நிலையங்களில் நடைபெறும் முறைகேடுகளைத் தடுக்க மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென விவசாயிகள் வலியுறுத்தனர்.

திருவாரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது.  மாவட்ட ஆட்சியர் எம். சந்திரசேகரன் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

பி.எஸ். மாசிலாமணி: அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் 40 கிலோ மூட்டை ஒன்றுக்கு ரூ. 15 வரை விவசாயிகளிடம் முறைகேடாக பிடித்தம் செய்யப்படுகிறது. இதை முறைப்படுத்த வேண்டும். தோட்டக்கலைத் துறை செயல்பாடற்றுள்ளது. இத் துறை அலுவலர்கள் விவசாயிகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பி.ஆர். பாண்டியன்: நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் இடைத்தரகர்களை ஒழிக்க வேண்டும். அரசு வழங்கும் முழுத் தொகையும் விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டும்.  ஈரப்பத அளவில் நிபந்தனைகளைத் தளர்த்தி கொள்முதல் செய்ய வேண்டும்.

பழனிவேல்: விவசாயிகளுக்கு கோனோவீடர் கருவிகள் வழங்குவதற்கு பதிலாக மானிய விலையில் தார்பாய்கள் வழங்க வேண்டும்.

நெடுவை டி. ராஜதுரை: மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் நூற்றுக்கணக்கான விவசாயிகள் ஆழ்குழாய் கிணறுகளுக்கு மின் இணைப்பு கோரி விண்ணப்பித்து பல மாதங்களாகியும் இதுவரை இணைப்புகள் அளிக்கப்படவில்லை. இதுகுறித்து விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சத்தியநாராயணன்: அறுவடை இயந்திரத்தை அதிகப்படுத்த வேண்டும். கடன் தள்ளுபடியில் சிறு மற்றும் பெரு விவசாயிகளிடம் பாகுபாடு காட்டாமல் அனைத்து விவசாயிகளுக்கும் கடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

டி. கோவிந்தராஜ்: முள்ளியாற்றில் இரண்டுமுறை பல லட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்ட கரைதடுப்புச் சுவர்கள் இடிந்து விύட்டன. எனவே, ஆற்றின் கரையோரங்களில் நாணல் வளர்த்தால் அது கரை அரிப்பைத் தடுக்கும். அதற்கான நடவடிக்கைகளில் வேளாண் துறை இறங்க வேண்டும்.

ஆர். ஜெயராமன்: மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்திரிக்காய் விஷயத்தில் தமிழக அரசின் நிலைப்பாடு குறித்த முதல்வரின் அறிவிப்பை மகிழ்வோடு வரவேற்கிறோம். அதேவேளையில் இதற்கு முழுமையான தடையை விதிக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.    கந்தசாமி: கோரையாறு மற்றும் பாமணி ஆறுகளில் நடுவே மணல் திட்டுகள் உள்ளன. இதனால் பாசன நேரத்தில் தண்ணீர் செல்வதில் தடை ஏற்படுகிறது. அதேபோன்று வெள்ள காலங்களில் தண்ணீர் ஊருக்கு புகுந்து விடுகிறது.

இதை தடுக்க இந்த மணல் திட்டுகளை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். கூட்டத்தில் அரசு அலுவலர்கள், விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

கூட்டம் தொடங்கும் முன் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் பி. பக்கிரிசாமியின் மறைவுக்கு மாவட்ட ஆட்சியர் மற்றும் அலுவலர்கள், விவசாயிகள் 2 நிமிஷ மௌன அஞ்சலி செலுத்தினர்.

**மழையின்றி விவசாயிகள் கவலை**

First Published : 29 Jan 2010 05:44:35 AM IST

ராஜபாளையம், ஜன. 28: ராஜபாளையம் மற்றும் சுற்றுப் பகுதியில் போதிய மழை பெய்யாத நிலையில் வெயில் வாட்டியெடுக்கத் துவங்கியுள்ளதால் விவசாயிகள் பெரும் கவலையடைந்துள்ளனர்.

ராஜபாளையம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதியில் கடந்த ஆண்டு தென் மேற்குப் பருவ மழை குறைந்தளவு கூட பெய்யவில்லை. கோடை மழையும் பெய்யாத நிலையில் வடகிழக்குப் பருவ மழை குறைந்தளவு மட்டுமே பெய்து குளங்களுக்கு ஒரளவு தண்ணீர் வந்து தேங்கியது. தற்போது பல பகுதிகளில் உள்ள குளங்களில் தண்ணீர் வற்றி விட்டது. மழை தொடர்ந்து பெய்யாத நிலையில், தற்போது கடுமையான வெயில் வாட்டியெடுக்கத் துவங்கியுள்ளது. மழை ஒரளவு பெய்தாலே கிணறு வசதியில்லாத விவசாயிகள் பின் பட்டத்தில் நடவு செய்த நெல் பயிர்களை விளைவிக்க முடியும்.

மின் தட்டுப்பாடு, மழையின்மை பிரசனைகளால் விவசாயிகள் பெரும் கஷ்டப்படும் சூழ்நிலையில், தற்போது கடுமையான வெயிலும் வாட்டியெடுத்து வருவதால் விவசாயிகள் பெரும் அதிருப்தியில் உள்ளனர்.

**இன்று நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

First Published : 29 Jan 2010 06:57:02 AM IST

நாகப்பட்டினம், ஜன. 28: நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் நாகை மாவட்ட ஆட்சியரகத்தில் வெள்ளிக்கிழமை (ஜன.29) காலை 11 மணிக்கு நடைபெறுகிறது. முன்னோடி விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்கேற்று, கோரிக்கை மற்றும் ஆலோசனைகளைத் தெரிவிக்குமாறு நாகை மாவட்ட ஆட்சியர் ச. முனியநாதன் கேட்டுக் கொண்டுள்ளார்.

**பிப். 2 முதல் கோழிக் கழிச்சல் தடுப்பூசி முகாம்**

First Published : 29 Jan 2010 04:59:08 AM IST

ராமநாதபுரம், ஜன. 28: ராமநாதபுரம் மாவட்டத்தில் வரும் பிப்ரவரி 2 ஆம் தேதி முதல் 15 ஆம் தேதி வரை கோழிக் கழிச்சல் தடுப்பூசி முகாம் நடத்தப்பட உள்ளது என்று மாவட்ட ஆட்சியர் த.ந.ஹரிஹரன் வியாழக்கிழமை தெரிவித்தார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு.


ராமநாதபுரம் மாவட்டத்தில் 2010 ஆம் ஆண்டுக்கு வரும் பிப்ரவரி 2 முதல் 15 ஆம் தேதி வரை இரு வாரங்களுக்கு கோழிக் கழிச்சல் தடுப்பூசி முகாம் கால்நடை பராமரிப்புத் துறையினரால் நடத்தப்படவுள்ளது.

இந்த முகாமில் 1.65 லட்சம் டோஸஸ் கோழிக் கழிச்சல் தடுப்பூசி மருந்துகள் பயன்படுத்தப்படும். இந்த மாவட்டத்தில் உள்ள 11 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும் இருவார தடுப்பூசி முகாம் கால்நடை பராமரிப்புத்

துறையினர் கிராமங்களில் உள்ள கால்நடை நிலையங்கள் மூலமாக நடத்தவுள்ளனர். கோழிகளை வளர்க்கும் பொதுமக்கள் அருகிலுள்ள கால்நடை நிலையத்தில் உதவி மருத்துவர்களை அணுகி கோழிக் கழிச்சல் தடுப்பூசிகளை கோழிகளுக்குப் போட்டு பயன் பெறலாம்.

### உணவு பணவீக்கம் 17.40%

First Published : 29 Jan 2010 12:01:00 AM IST




புது தில்லி, ஜன.28: கடந்த மூன்று வாரங்களாக சற்று குறைந்து வந்த உணவு பணவீக்கம் தற்போது மீண்டும் உயர்ந்துள்ளது. ஜனவரி 16-ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் நாட்டின் உணவு பணவீக்கம் 17.40 சதவீதமாக உயர்ந்தது.

உணவு பணவீக்கம் மீண்டும் உயர்ந்ததைத் தொடர்ந்து வெள்ளிக்கிழமை வெளியாக உள்ள ரிசர்வ் வங்கி ஆய்வுக் கொள்கையில் வட்டி விகிதம் உயர்த்தப்படுவதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது. ஜனவரி 9-ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் பணவீக்கம் 16.81 சதவீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு டிசம்பரில் உணவு பணவீக்கம் 7.31 சதவீதமாக இருந்தது. ஒட்டுமொத்த பணவீக்க விகிதம் கடந்த செப்டம்பர் மாதத்திலிருந்து 13 வாரங்களுக்கு தொடர்ந்து மைனஸ் நிலையில் இருந்தது. உருளைக் கிழங்கு விலை கடந்த ஆண்டைக் காட்டிலும் தற்போது 57.56 சதவீதம் உயர்ந்துள்ளது. பருப்பு வகைகளின் விலைகளும் 46 சதவீதம் உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

உணவு பணவீக்கத்தைப் பொறுத்தமட்டில் தற்போது உடனடியாகக் குறைய வாய்ப்பில்லை என்று தெரிகிறது. ரபி பருவ பயிர்கள் சந்தைக்கு வந்த பிறகே உணவுப் பொருள்களின் விலை குறையும் என்று எதிர்பார்க்கலாம்.

உணவு பணவீக்கம் அடுத்த சில வாரங்களுக்கு இதே நிலையில் தொடரும். இருப்பினும் வட்டி விகிதத்தை ரிசர்வ் வங்கி உயர்த்த வாய்ப்பில்லை என்று ஹெச்டிஎப்சி வங்கி தலைமை பொருளாதார நிபுணர் அப்ஷீக் பரூவா தெரிவித்தார்.

ஒருவேளை வட்டி விகிதத்தை உயர்த்தினால் அதன் பலன் மிகக் குறைந்த காலமே இருக்கும். நாட்டின் ஒட்டுமொத்த பணவீக்கம் நிதி ஆண்டு இறுதியில் (மார்ச்) 9 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

### விவசாயிகள் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கையாள வலியுறுத்தல்

First Published : 29 Jan 2010 03:07:45 AM IST

ராசிபுரம்,ஜன.28: விவசாயிகள் உளுந்து பயிறு வகைகளை பயிரிட வேண்டும் என ராசிபுரம் வேளாண்மைத்துறை உதவி இயக்குனர் வலியுறுத்தியுள்ளார்.

÷ராசிபுரம் வேளாண்மைத்துறை உதவி இயக்குனர் ந.சுப்ரமணியன் வெளியிட்டுள்ள செய்தி:

÷உளுந்து மற்றும் பயறு போன்றவற்றின் விலைகள் அதிகரித்து வருவதால் உளுந்து சாகுபடியினை மேற்கொள்ள இது சரியான தருணம் ஆகும். உளுந்து சாகுபடி செய்ய ஒரு ஏக்கருக்கு எட்டு கிலோ விதை போதுமானது. பூசன மருந்தான டிரைக்கோடெர்மா விரிடி ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் என்ற அளவில் கலந்து விதை நேர்த்தி செய்த விதைப்பதால் வேர் அழுகல் நோயினை கட்டுப்படுத்தலாம்.

÷தழைச் சத்தினை கிரகித்து கொடுக்கவும், மண்ணில் உள்ள மணி சத்தை பயிருக்கு கிட்டும் நிலைக்கு மாற்றி தரவும் எட்டு கிலோ விதையுடன் ஒரு பாக்கெட் ரைசோபியம் மற்றும் ஒரு பாக்கெட் பாஸ்போ பாக்டீரியாவை ஆறிய அரிசி கஞ்சியுடன் கலந்து விதை நேர்த்தி செய்து அரை மணி நேரம் நிழலில் உலர்த்தி பின்பு விதைக்க வேண்டும்.

÷நடவு வயலுக்கு அடியுரமாக ஏக்கருக்கு 4 பாக்கெட் தலா ரைசோபியம், மற்றும் பாஸ்போபாக்டீரியா ஆகியவற்றை 25 கிலோ தொழு உரத்துடன், கலந்து இட வேண்டும். மேலும் யூரியா 22கிலோ கிராம், சூப்பர் பாஸ்பேட் 125 கிலோ கிராம், மற்றும் ஜிப்சம் 44கிலோ கிராம் இருத்தல் அவசியம்.

விதைப்பு செசய்தவுடன் பயறு வகை நுண்ணுட்டம் ஏக்கருக்கு இரண்டு கிலோ என்ற அளவில் மணலுடன் கலந்து மேலாக இட வேண்டும். பூக்கும் பருவத்தில் 2 சதம் டி.ஏ.பி. கரைசலை பூ பூக்க ஆரம்பித்தவுடன் ஒரு முறையும், 15 நாட்கள் கழித்து மறுமுறையும் தெளிக்க வேண்டும்.

÷பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கையாள வேண்டும். மேலும் விவரங்களுக்கு ராசிபுரம் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

தினமலர்

**கூட்டுறவு கடைகளில் பருப்பு விலையை வாரந்தோறும் மாற்றியமைக்க திட்டம்**
ஜனவரி 29,2010,02:42



சென்னை: 'ரேஷனில் வழங்க அரிசி, பருப்பு, சர்க்கரை போன்றவை போதிய அளவு இருப்பு உள்ளது. கூட்டுறவு கடைகளில் குறைந்த விலைக்கு பருப்புகளை வழங்குவதற்கு, வாரந்தோறும் விலை நிர்ணயிக்கப்படும்' என்று உணவு மற்றும் கூட்டுறவுத் துறை செயலர் கூறினார்.

உணவு மற்றும் கூட்டுறவுத் துறை செயலர் சண்முகம் கூறியதாவது: தமிழகத்தில் குறிப்பாக டெல்டா பகுதிகளில், 1,052 கொள்முதல் மையங்கள் மூலம் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. தினமும் 17 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. உச்சகட்ட நேரத்தில் நாள் ஒன்றுக்கு 25 ஆயிரம் டன் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டு, குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டதால், கொள்முதல் செய்யவில்லை. வழக்கமாக, 17.9 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்படும். இந்த ஆண்டு 15 முதல் 16 லட்சம் டன் கொள்முதல்

செய்ய வாய்ப்புள்ளது. தமிழகத்தில் பொது வினியோகத் திட்டத்தில் வழங்குவதற்கு அரிசி போதுமான அளவு உள்ளது. சிறப்பு ஒதுக்கீடாக, வரும் மார்ச் மாதம் வரைக்கு 2.5 லட்சம் டன் அரிசியை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது.

இதுதவிர, வெளிச்சந்தை திட்டத்தின் கீழ், அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கு 1.26 லட்சம் டன்னும், இந்த ஆண்டு ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களுக்கு 1.26 லட்சம் டன்னும் ஒதுக்கப்பட்டது. இவை அனைத்தும், கிலோ 15 ரூபாய் 37 காசு என்ற அடிப்படையில் வாங்கப்படுகிறது. இன்னும் இரண்டு மாதங்களுக்கு தேவையான அரிசி தற்போது இருப்பு உள்ளது. பருப்பு வகைகளை பொறுத்தவரை, சப்ளை அதிகரித்துள்ளது. தற்போது 10 ஆயிரம் டன் துவரம் பருப்பும், 5,000 டன் உளுத்தம் பருப்பும் இருப்பு உள்ளது. துவரம் பருப்பு விலை குறைந்து வருகிறது. வெளிச்சந்தையில் குறைந்த போதிலும், சில்லறை விற்பனையில் கிலோ 70 முதல் 80 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இந்த விலையை குறைக்க, அனைத்து கூட்டுறவு மற்றும் மொத்த விற்பனை கடைகளிலும், மண்ணெண்ணெய் கடைகளிலும் குறைந்த விலைக்கு பருப்பு விற்கப்படுகிறது.

தமிழகம் முழுவதும் 500க்கும் மேற்பட்ட கடைகளில், முதல் கிரேடு துவரம் பருப்பு 65 ரூபாய்க்கும், இரண்டாம் கிரேடு பருப்பு 60 ரூபாய்க்கும், கனடா மஞ்சள் பருப்பு 50 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. அடுத்த வாரம் விலை குறைந்தால், இங்கும் விலை குறைக்கப்படும். இதற்காக, வாரந்தோறும் அதிகாரிகள் கூடி, அப்போதுள்ள விலைக்கு ஏற்ப, பருப்பு விலையை நிர்ணயிப்பர். சர்க்கரை முடிந்தளவு கொள்முதல் செய்யப்படுகிறது. பொது வினியோகத் திட்டத்தில் வழங்க 35 ஆயிரம் டன் சர்க்கரை இருப்பு உள்ளது. எனவே, தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை. கூட்டுறவு சங்கங்களின், டிபார்ட்மென்டல் ஸ்டோர்களில் காய்கறிகள் விற்பனை தொடர்ந்து நடக்கும். பொங்கல் வரை மட்டுமே, இந்த விற்பனையை தொடர ஏற்கனவே முடிவு செய்யப்பட்டது. ஆனால், தற்போது அதைத் தொடர்ந்து மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு சண்முகம் கூறினார்.

### வடமாநிலங்களில் விளைச்சல் பனிமூட்டத்தால் பாதிப்பு

ஜனவரி 29,2010,00:00  IST

புதுடில்லி:வடமாநிலங்களில் நிலவும் கடும் பனிமூட்டத்தால் உணவு மற்றும் தோட்டப் பயிர்கள் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. வரலாறு காணாத அளவில் வடமாநிலங்களில் இந்த ஆண்டு பனிமூட்டம் கடுமையாக உள்ளது. பட்டப்பகலில் எதிரில் வரும் வாகனம் தெரியாத அளவுக்கு நிலவும் இந்தக் கொடுமையான பனிமூட்டத்தால் போக்குவரத்து மட்டுமல்லாமல், பயிர் விளைச்சலும் பாதிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப் உள்ளிட்ட சில மாநிலங்களில் பயிரிடப்பட்டு வரும் கோதுமைப் பயிர், பனியால் நிறம் மாறியுள்ளதாக, பஞ்சாப் வேளாண் பல்கலைக்கழக கூடுதல் இயக்குனர் எம்.எஸ்.கில் தெரிவித்துள்ளார். குறிப்பாக, பி.பி.டபிள்யூ.343 ரக கோதுமைப் பயிர்களின் இலைகள் மஞ்சள்நிறமாக மாறிவிட் டன. இதேபோல், தோட்டப் பயிர்களும் பனி மூட்டத்தால் வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக பழங்கள், காய்கறிகள், மற்றும் மலர்கள் ஆகியவை அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

**கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் எண்ணெய் பனை சாகுபடி பயிற்சி**

கடலூர் : கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் விவசாயிகளுக்கு எண் ணெய் பனை சாகுபடி குறித்த இரண்டு நாள் பயிற்சி நடந்தது.

கரும்பு ஆராய்ச்சி நிலைய முனைவர் பாலராஜேந்திரன் தலைமை தாங்கி பயிற்சியை துவக்கி வைத்தார். கடலூர் வட் டார உதவி வேளாண் இயக்குனர்  இளவரசன் வரவேற்றார். துணை இயக்குனர் பாபு எண்ணெய் பனை

அபிவிருத்தி திட்டம், பிற மத்திய அரசின் திட்டங்கள் குறித்து விளக்கினார். மண் பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் அமரேசன் மண் ஆய்வின் முக்கியத்துவம் குறித்து விளக்கினார்.

உற்பத்தி அலுவலர் சாலமன் செல்வசேகர், முன் னாள் பண்ணை வானொலி அலுவலர் துகிலி சுப்ரமணியம், காவேரி பாமாயில் நிறுவன ஒருங்கிணைப் பாளர் நாகப்பன், மாவட்ட பொறுப்பாளர் சரவணக்குமார் ஆகியோர் எண்ணெய் பனை சாகுபடி குறித்தும், பாமாயில் ஆலைகளுடன் விவசாயிகள் தொடர்பு கொள்ள ஏற்ற வழிமுறைகள் குறித்தும் விளக்கினர்.

ஏற்பாடுகளை கடலூர் உதவி வேளாண் அலுவலர்கள் ஜெயராமன், ஜெயமணி. பரமசிவம், தெய்வசிகாமணி, பிரபாகரன், காவிரி பாமாயில் நிறுவன அலுவலர் மனோகர் செய்திருந்தனர். கடலூர் வட்டார விவசாயிகள் 50 பேர் பங்கேற்றனர். கடலூர் வேளாண் அலுவலர் சின்னக்கண்ணு நன்றி கூறினார்.

---

**மழைநீர் சேகரிப்பு அமைக்காவிட்டால் விவசாயிகள் மீது நடவடிக்கை: கலெக்டர்**

திண்டுக்கல் : அரசிடம் நிதி பெற்று மழைநீர் சேகரிப்பு அமைப் புகளை ஏற்படுத்தாத விவசாயிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என கலெக்டர் வள்ளலார் எச்சரித்தார்.

திண்டுக்கல் மாவட்ட விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் கலெக்டர் தலைமையில் நடந்தது. விவசாய இணை இயக்குனர் சம்பத் உட்பட அதிகாரிகள், விவசாயிகள் பங்கேற்றனர். ஒட்டன்சத்திரம் நங் காஞ்சியாறு பகுதியில் மணல் திருட்டு அதிகம் நடப்பதால் 300க்கும் மேற்பட்ட கிணறுகளில் நிலத்தடி நீர் மட்டம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மணல் திருட்டை தடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். பதிலளித்த கலெக்டர் வள்ளலார், நங்காஞ்சியாறு பகுதியில் மணல் அள்ள தடை விதித்து அறிவிப்பு பலகை வைக்கப்படும் என்றார்.

பரப்பலாறு அணையில் இருந்து திறக்கப்படும் நீர் 6 கண்மாய்களுக்கு மட்டுமே செல்கிறது.மீதமுள்ள மூன்று கண்மாய்களுக்கு நீர் திறந்து விடுவதில்லை. இக்கண்மாய்களுக்கும் பரப்பலாறு அணையில் இருந்து நீர் திறக்க வேண்டும் என்றனர்.

பதிலளித்த கலெக்டர், பரப்பலாறு அணையில் 80 அடி உயரத்திற்கு தண்ணீர் உண்டு. ஆனால் 40 அடி வரை மணல் தேங்கி கிடப் பதால், மீதம் உள்ள தண் ணீரை குடிநீருக்கு பயன்படுத்த வேண்டும். எனவே தற்போது அணையில் தண்ணீர் திறக்க வாய்ப்பு இல்லை. அதிக தண்ணீர் திறக்க வசதியாக பரப்பலாறு அணை ஆயக்கட்டு பகுதியில் அங்குள்ள 9 கண் மாய்களும் இணைக்கப்படும் என்றார்.

வேடசந்தூர் தாலுகா கோபினூரில் புதிதாக கட்டப்பட்ட தடுப்பணையினை ஆக்கிரமிப்பாளர் கள் இடித்து விட்டனர் என விவசாயிகள் புகார் கூறினர். இது குறித்து ஆர்.டி.ஓ., விசாரணைக்கு கலெக்டர் உத்தரவிட்டார். அழகாபுரி அணையும் அடிக்கடி உடைந்து தண்ணீர் வீணாகிறது. ஒட்டன்சத்திரம் பகுதியில் சடையன்குளம் செல்லும் பாதை ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து மீட்கப் பட்டுள்ளது. மீண்டும் ஆக்கிரமிப்பு உருவாகாமல் தடுக்க பொதுமக்கள் உதவ வேண் டும். மழை குறைவாக இருப்பதால் அத் தனை விவசாயிகளும் தண் ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். அரசிடம் நிதி பெற்றுக்கொண்டு கிணறுகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்தாத விவசாயிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்தார்.

**வேளாண் தகவல் மைய செயல்பாடுகள் ஆய்வு**

---

குஜிலியம்பாறை : ஆர்.வெள்ளோட்டில்,விவசாயிகளுக்கான வேளாண் தகவல் மைய (அக்கிரி கிளினிக்) செயல்பாடுகள் பற்றி, அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

குஜிலியம்பாறை ஒன்றியம் ஆர்.வெள்ளோட்டில், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் சார்பில், வேளாண் தகவல் மையம் புதிதாக துவக்கப்பட்டுள்ளது. விவசாயிகள், தங்கள் நிலத்தடி நீரின் தன்மை, மண் பரிசோதனைகளை இந்த மையத்திலேயே செய்து கொள்ளலாம். முடிவுக்கு ஏற்ப, தகுதியான பயிர்களை பயிரிட்டு கூடுதல் மகசூல் பெறும் வகையில் இம்மையம் செயல்படுகிறது. உயிர் உரங்கள், சான்றுபெற்ற விதைகள் இருப்பு வைத் தும், விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

இப்பகுதியில், புதிதாக துவக்கப் பட்டுள்ள, இம்மையத்தின் செயல் பாடுகள் பற்றி, மாவட்ட துணை வேளாண் மை இயக்குநர் துரைராஜ், தமிழ்நாடு வேளாண் பல்கலை கழக பேராசிரியர் சரவணபாண்டியன் ஆய்வு செய்தனர். குஜிலியம்பாறை உதவி இயக்குநர் பாஸ்கரன், வேளாண் அலுவலர் ரவிபாரதி, உதவி அலுவலர் ரவிச்சந்திரன், கூட்டுறவு சொசைட்டி செயலாளர் அழகுமலை உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**நாளை முதல் 3 நாள் வேளாண் கண்காட்சி**

ஈரோடு: ஈரோட்டில் மூன்று நாள் விவசாய கண்காட்சி வேளாண்துறை சார்பில் நாளை மல்லிகை அரங்கில் துவங்குகிறது.ஈரோடு மேலாண்மை தொழில்நுட்ப மேலாண் முகமை திட்ட இயக்குனர் (ஆத்மா) கோபால் கூறியதாவது: ஈரோடு மல்லிகை அரங்கில் மூன்று நாள் விவசாய கண்காட்சி நாளை துவங்கி, ஃபிப்ரவரி 1ம் தேதி முடிகிறது. அரசு துறைகள், தனியார் துறைகள் கண்காட்சியில் ஸ்டால் அமைத்துள்ளன.

புதிய இன ஆடு வளர்ப்பு, ஈமு கோழி வளர்ப்பு, புதிய விவசாய எந்திரங்கள், நீர்ப்பாசன கருவிகள், பசுமை குடில், சோலார் வேலி, நவீன விவசாய தொழில் நுட்பங்கள் குறித்த ஸ்டால்கள் இடம் பெறுகின்றன. கண்காட்சியை நாளை மாலை 3 மணிக்கு ஈரோடு கலெக்டர் சுடலைகண்ணன் துவக்கி வைக்கிறார்.

பயறு வகை உற்பத்தி திறனை அதிகரித்தல், செம்மை நெல் சாகுபடி, துல்லிய பண்ணையம் பற்றி விஞ்ஞானிகள் பேசுகின்றனர். கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் சிவமுத்துக்குமாரசாமி, முன்னோடி வங்கி மேலாளர் முனிராஜ், அக்காஸ் சேவை நிறுவன தலைவர் துரைசாமி, மைராடா திட்ட இயக்குனர் அழகேசன் ஆகியோர் பேசுகின்றனர். பவானிசாகர் ஆராய்ச்சி நிலையத் தலைவர் பாலுசாமி சிறப்பாளராக கலந்து கொள்கிறார். இவ்வாறு அவர் கூறினார்.

**டெல்டா பாசன பகுதியாக கரூரையும் சேர்க்கணும் விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் கோரிக்கை**

கரூர்: "கரூர் மாவட்டத்தை டெல்டா பாசன பகுதியாக அறிவிக்க அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும்' என்று மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது. கரூர் மாவட்ட அளவிலான விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் கரூர் கலெக்டர் அலுவலக வளாகத்தில் நடந்தது. கலெக்டர் உமாமகேஸ்வரி தலைமை வகித்தார்.

"அனஞ்சனூரில் ரேஷன் கார்டுக்கு அரிசி, மண்ணெண்ணெய் உள்ளிட்ட அனைத்து பொருளும் வாங்க கிளை ரேஷன் கடை துவக்க' நங்கம் வாய்க்கால் பாசனதாரர்கள் சபை தலைவர் பரமசிவம் கோரிக்கை வைத்தார். "குளித்தலை தாலுகாவில் தொடக்க வேளாண்மை சங்கம் கீழ் செயல்படும் நங்கவரம் அங்காடியில் 936 கார்டுகள் உள்ளன. அனஞ்சனூர், கோவிந்தனூரில் 154 கார்டுகள் உள்ளன. இப்பகுதியில் பகுதி நேர ரேஷன் கடை துவங்கப்படுவது குறித்து தொடக்க வேளாண்மை சங்கத்தின் அறிக்கை கிடைத்ததும் அங்காடி துவங்கப்படும்' என்று குளித்தலை தாசில்தார் அறிவித்தார்.

மருதாண்டன் மேட்டுவாய்க்காலை வதியத்தில் இருந்து லாலாப்பேட்டை வரை எட்டு கி.மீ., தாரம் வெட்டுவது குறித்த கோரிக்கைக்கு, ஐந்து கி.மீ., தூரத்துக்கு தூர் வாரி நடவடிக்கை எடுக்க குளித்தலை ஆற்றுபாதுகாப்பு கோட்ட பொறியாளர் பதிலளித்தார்.

கரூரில் பொதுப்பணித்துறை கால்வாய் கடைமடையான கோவிந்தம்பாளையம் ரோட்டில் இருந்து முனியப்பன் கோவில் வரை தூர் வாரவும், பாதாள சாக்கடை தண்ணீரை கால்வாயில் விடுவதால் தூர்வாரப்படாமல் உள்ளதாகவும் பஞ்சமாதேவி பாசன வாய்க்கால் விவசாயிகள் சங்கம் சார்பில் குற்றச்சாட்டு வைக்கப்பட்டது. கரூர் நகராட்சி சார்பில் பதிலளிக்கப்பட்டதாவது: இடதுகரை கால்வாய் தூர் வாரப்பட்டு கடைமடை பகுதிவரை தண்ணீர் செல்கிறது என்று அமராவதி ஆற்றுபாதுகாப்பு கோட்ட அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். கரூர் நகராட்சியில் தேசிய நதிநீர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காவிரி மற்றும் அமராவதி ஆறு மாசுபடுவதை தவிர்க்கும் வகையில் பாதாள சாக்கடை பணி மேற்கொள்ளப்பட்டது.

சேகரமாகும் கழிவுநீர் அரசு காலனியில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தினால் கழிவு அகற்றப்பட்டு "பிஓடி' பரிசோதனை செய்யப்பட்டு கால்வாயில் விடப்படுகிறது. பஞ்சமாதேவி கால்வாய் தூர்வார உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொதுப்பணித்துறையிடம் கோரப்பட்டுள்ளது. காவிரி ஆற்று பாசனம் பெறும் கரூர் மாவட்டத்தை டெல்டா மாவட்டத்துடன் இணைக்க நங்கம் வாய்க்கால் பாசனதாரர்கள் சபை சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. ஆற்றுபாதுகாப்பு கோட்டம் கரூர் மற்றும் திருச்சி சார்பில் அறிவிக்கப்பட்டதாவது: காவிரி ஆற்றின் பாசன பகுதிகள் மேலணையில் இருந்து டெல்டா பாசன பகுதியாக அரசு அறிவித்துள்ளது. கரூர் மாவட்டத்தை டெல்டா பாசன பகுதியாக அறிவிக்க அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும்.

மேலும், காவிரி டெல்டா பாசனத்துக்கு ஆண்டுதோறும் மேட்டூர் அணையில் இருந்து ஜூன் முதல் ஜனவரி வரை தண்ணீர் வழங்கப்படுகிறது. இதர காலங்களில் பாசன வாய்க்கால்கள் அடைக்கப்படுகிறது. ஆனால், கரூர் மாவட்ட பாசன வாய்க்கால்களுக்கு ஒரு மாதம் மட்டும் அடைப்பு காலமாக கடைபிக்கப்பட்டு 11 மாதம் தண்ணீர் வழங்கப்படுகிறது.

வெள்ளம், புயல் போன்ற காலங்களில் விவசாயம் பாதிக்கப்படும் மாவட்டங்களுக்கு மட்டும் அரசு இழப்பீடு வழங்கப்படுகிறது. குளித்தலை அருகே பஞ்சப்பட்டி ஏரியை வெள்ள நீர் சேகரிக்க ஏற்பாடு செய்வது குறித்து குளித்தலை உழவர் ஆய்வுமன்ற அமைப்பாளர் கோபாலதேசிகன் கோரிக்கை வைத்தார். அரியாறு வடிவில பாசனப்பிரிவு செயற்பொறியாளர் அலுவலக தரப்பில் அறிவிக்கப்பட்டதாவது:

பஞ்சப்பட்டி ஏரி, அதற்கு மேல்புறம் உள்ள ஏரி மற்றும் குளத்தில் இருந்து பருவமழை காலத்தில் பெறப்படும் வெள்ளநீரை தேக்கி வைக்கும் வெள்ள மிதமாக்கியாகவே வடிவமைக்கப்பட்டது. காலப்போக்கில் பாசன ஏரியாக மாற்றப்பட்டது. தற்போது 165 கோடி செலவில் நடக்கும் மாயனூர் வெள்ளத்தடுப்பு அணையை தவிர்த்து, காவிரியில் மற்றொரு வெள்ளத்தடுப்பு அணை தேர்வு செய்து பஞ்சப்பட்டி ஏரிக்கு தண்ணீர் கொண்டு செல்வது தொழில்நுட்ப ரீதியாக சாத்தியம் இல்லை.

தோகமலையில் புதிய உழவர் சந்தை அமைக்க வளையப்பட்டி உழவர் ஆய்வுமன்ற அமைப்பாளர் சதீஷ் கோரினார். வேளாண் வணிகம் துணை இயக்குனர் அலுவலக தரப்பில் அறிவிக்கப்பட்டதாவது: கரூர் மாவட்டத்தில் தற்போது இரண்டு உழவர் சந்தை அமைக்க மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வெங்கமேடு மற்றும் சின்னதாராபுரத்தில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், ஒரு உழவர் சந்தை அனுமதிக்கப்பட்டால் தோகமலை வட்டாரத்தில் துவங்க ஏற்பாடு செய்யப்படும். இவ்வாறு பல்வேறு கோரிக்கைகளுக்கு அரசு துறை சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டது.

**கி.கிரி மாவட்டத்தில் பூத்து குலுங்கும் மா மரங்கள் அதிக உற்பத்திக்கு விவசாயிகள் எதிர்பார்ப்பு**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மா மரங்களில் அதிக அளவில் பூக்கள் பூத்துள்ளதால், இந்த ஆண்டு மா விளைச்சல் அதிகரிக்கும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 40 ஆயிரம் ஹெக்டேருக்கு மேல் மா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு நிலவும் சீதோஷ்ணநிலை வெப்ப மண்டல பழங்கள் சாகுபடி செய்ய சாதகமாக உள்ளன. இதில், மா சாகுபடி முக்கிய பங்கு வகிக்கிறது.

மாவட்டத்தில் அல்போன்ஸா, தோதாபுரி பங்கனப்பள்ளி, நீலம், செந்தூரா, மல்கோவா, பீத்தர் ஆகிய ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதில், தோத்தாபுரி ரகம் 60 சதமும், செந்தூரா மற்றும் நீலம் ரகங்கள் 30 சதம், அல்போன்ஸா ஐந்து சதம் சாகுபடி செய்யப்படுகிறது. பீத்தர், மல்கோவா, ருமானி, பங்கனப்பள்ளி, காலப்பாடு உள்ளிட்ட ரகங்கள் ஐந்து சதம் சாகுபடி செய்யப்படுகிறது.

தற்போது முன்பருவ ரகங்களான செந்தூரா, பீத்தர், பையூர்-1, நீலம் ஆகியவற்றில் பூ பூத்து பிஞ்சுகள் விட ஆரம்பித்துள்ளது. இதே வேளையில் மத்திய பருவ ரகங்களான பெங்களூரா, பங்கனப்பள்ளி, அல்போன்சா, சேலம் பெங்களூரா, ஜஹாங்கீர், இமாம்பசந்த், குதாதாத் போன்ற ரகங்களில் பூக்கள் பூக்க ஆரம்பித்துள்ளது. பின் பருவ ரகங்களான நீலம், மல்கோவா போன்றவற்றில் இலைகளில் துளிர் விட்டு பூக்கள் பூக்க தயார் நிலையில் உள்ளது. மாவட்டத்தில் கிருஷ்ணகிரி, சந்தூர், ஜெகதேவி, பர்கூர், தொகரப்பள்ளி, வேலம்பட்டி, நாகரசம்பட்டி, கரடியூர், பாலிநாயனப்பள்ளி, மத்தூர், ஊத்தங்கரை, ஆலப்பட்டி, ராயக்கோட்டை, வேப்பனப்பள்ளி ஆகிய பகுதிகளில் மத்திய பருவ ரகங்களில் அதிக அளவு பூ பூத்துள்ளது.

வழக்கமாக டிசம்பர் முதல் மார்ச் மாதம் வரை மாவில் சாம்பல் நோய் தாக்குதல் இருக்கும். தற்போது, பூத்துள்ள பூக்களில் சாம்பல் நோய் தாக்குதல் அதிகம் இல்லாத நிலையில் விவசாயிகள் மற்றும் மா குத்தகை வியாபாரிகள் மா பூக்களுக்கு சாம்பல் நோய் வருவதை தடுக்க முன்கூட்டியே மருந்துகளை தெளித்து வருகின்றனர். பூக்கள் அதிகம் பூத்திருப்பதால், அதிக உற்பத்தி கிடைக்கும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

இது குறித்து ஆலப்பட்டியை சேர்ந்த மா விவசாயி முருகன்(40) கூறியதாவது: ஆலப்பட்டி பகுதியில் கடந்த இரு ஆண்டுடாக மாவில் பூக்கள் பூத்து பிஞ்சுகள் விடும் பருவத்தில் சாம்பல் நோய் தாக்குதல் அதிகரித்திருந்தது. ஆனால், இந்தாண்டு மா பூக்கள் பூப்பது ஒரு வாரம் கால தாமதம் ஆனாலும் மத்திய பருவ ரகங்களில் அதிகம் பூக்கள் பூத்துள்ளது. முன்பருவ ரகங்களில் பூக்கம் பூத்து பிஞ்சுகள் விட ஆரம்பித்துள்ளது.

அதிக அளவில் பூத்துள்ள மத்திய பருவரகங்களில் சாம்பல் நோய் தாக்குதல் இருக்கும் என்பதால் விவசாயிகள் ஒருங்கிணைந்து தங்கள் தோப்பில் உள்ள மா செடிகளுக்கு மருந்துகளை தெளித்து வருகின்றனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மா தோப்புகளுக்கு அருகில் அதிக அளவில் செங்கல் சூளைகள் அமைத்திருப்பதால் அதில் இருந்து வெளிப்படும் அதிக வெப்பத்திறனாலும் பூக்கள் கருக வாய்ப்புள்ளது.
எங்கள் பகுதியில் மா தோட்டங்களுக்கு அருகில் செங்கல் சூளைகள் உள்ளதை மா அறுவடை வரை மூட கோரியுள்ளோம். செங்கல் சூளை உரிமையாளர்களும் இதற்கு சம்மதம் தெரிவித்துள்ளனர். மாவட்டத்தில் தற்போது நிலவும் சீதோஷ்ண நிலை மா சாகுபடிக்கு உகந்தமாக உள்ளது. அதனால், கடந்த ஆண்டை காட்டிலும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இந்த ஆண்டு மா சாகுபடி அதிகரிக்கும் என்று நம்பியுள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

**தெளிப்பு நீர் கருவிக்கு 50 சதவீத மானியம் வழங்கல்: உதவி இயக்குனர்**

ராசிபுரம்: "தெளிப்பு நீர் பாசனக் கருவிகள் வாங்க 50 சதவீதம் அல்லது 7,500 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது' என, எலச்சிபாளையம் வட்டார வேளாண் உதவி இயக்குனர் லோகநாத பிரகாசம் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: நாளுக்கு நாள் குறைந்து வரும் நீரின் அளவை கருத்தில் கொண்டு அரசு புதிய நீர் பாசன முறைகளை பரிந்துரை செய்து வருகிறது. குறைவாக உள்ள நீர் அளவைக் கொண்டு அதிகமான பரப்பளவில் பயிர் சாகுபடி செய்ய மிக சிறந்த முறையாக தெளிப்பு நீர்பாசன முறை உள்ளது. பயறு வகை மற்றும் நிலக்கடலை பயிர்களின் சாகுபடி பரப்பை அதிகரிக்க தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஒரு ஹெக்டேருக்கு தெளிப்பு நீர் கருவிகளை வாங்கி கொள்ள 50 சதவீதம் அல்லது அதிகபட்சமாக 7,500 ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. விவசாயிகள் விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடம் இருந்து தெளிப்பு நீர் கருவிக்காக விலைப்புள்ளி பெற்று, மானியம் போக மீதம் உள்ள தொகைக்கு டி.டி., எடுத்து சிட்டா, அடங்கல் போன்ற ஆவணங்களுடன் வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில் வழங்க வேண்டும். அவ்வாறு விண்ணப்பம் செய்பவர்களுக்கு விரைவில் தெளிப்பு நீர் பாசன கருவிகள் சப்ளை செய்ய உத்தரவு வழங்கப்படும். மொத்தம் 24 ஹெக்டேர் பரப்பளவிற்கு மட்டுமே நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளதால், தெளிப்பு நீர் பாசன கருவிகள் தேவைப்படும் விவசாயிகள் எலச்சிபாளையம் வட்டார வேளாண் துறை அலுவலர்களை அணுகி உரிய ஆலோசனை பெற்று விண்ணப்பிக்கலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு அதிகாரி ஆலோசனை**

நாமக்கல்: "உளுந்து ஒரு ஏக்கர் நடவு செய்ய எட்டு கிலோ விதை போதுமானது' என, வேளாண் இணை இயக்குனர் துரை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: உளுந்து சாகுபடி செய்ய இது சரியான தருணம். ஒரு ஏக்கருக்கு உளுந்து சாகுபடி செய்ய எட்டு கிலோ விதை போதுமானது. பூஞ்சான மருந்தான டிரைக்கோடெர்மாவிரிடி ஒரு கிலோ விதைக்கு நான்கு கிராம் என்ற அளவில் கலந்து விதை நேர்த்தி செய்து விதைப்பதால், வேர் அழுகல் நோய் கட்டுப்படுத்தலாம். காற்றில் உள்ள தழைச்சத்து கிரகித்துக் கொடுக்கவும், மண்ணில் உள்ள மணிச்சத்தை பயிருக்கு கிடைக்கும் நிலையில் மாற்றித் தரவும் 8 கிலோ விதையுடன் ஒரு பாக்கெட் ரைசோபியம் மற்றும் ஒரு பாக்கெட் பாஸ்போ பாக்டீரியாவை அரிசி கஞ்சியுடன் கலந்து விதை நேர்த்தி செய்யவேண்டும். பின், அரை மணி நேரம் நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும். நடவு வயலுக்கு அடியுரமாக ஏக்கருக்கு நான்கு பாக்கெட் ரைசோபியம், நான்கு பாக்கெட் பாஸ்போ பாக்டீரியா ஆகியவற்றை 25 கிலோ தொழு உரத்துடன் கலந்து இடவேண்டும். மேலும், யூரியா 22 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 125 கிலோ மற்றும் ஜிப்சம் 44 கிலோ இடுதல் அவசியம். விதைப்பு செய்தவுடன் பயிறு வகை நுண்ணூட்டம் இரண்டு கிலோ ஏக்கர் என்ற அளவில் மணலுடன் கலந்து மேலுரமாக இடவேண்டும். பூக்கும் பருவத்தில் இரண்டு சதவீதம் டி.ஏ.பி., கரைசலை பூ பூக்க ஆரம்பித்தவுடன் ஒரு முறையும், 15 நாட்கள் கழித்து மறு முறையும் தெளிக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**முட்டை கோழி விற்பனை கூட்டம் என்.இ.சி.சி., சேர்மன் தகவல்**

நாமக்கல்: "முட்டை கோழி விலையை உயர்த்துவது மற்றும் நாமக்கல் என்.இ.சி.சி., ரேட் அறிவிப்பு குறித்த கூட்டம் நாளை (30ம் தேதி) நாமக்கல்லில் நடக்கிறது' என, என்.இ.சி.சி., சேர்மன் செல்வராஜ் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: தற்போது முட்டை கோழி ஒரு கிலோ 22 ரூபாய்க்கு விற்பனையாகிறது. பிராய்லர் கோழி ஒரு கிலோ 35 ரூபாயிலிருந்து 40 ரூபாய் வரை உயர வாய்ப்புள்ளது. ஆனால், போட்டியின் காரணமாக விலை உயரவில்லை. இந்த நிலையை ஒழுங்குப்படுத்தி முட்டைக்கோழி விலையை உயர்த்துவது சம்மந்தமாக நாளை (30ம் தேதி) மாலை �மக்கல்லில் மோகனூர் சாலையில் உள்ள இளங்கோ திருமண மண்டபத்தில் பண்ணையாளர்கள், வியாபாரிகள் கூட்டம் நடக்க உள்ளது. பொம்மைக்குட்டை மேட்டில் நடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி நாமக்கல் என்.இ.சி.சி., ரேட் அறிவிக்கப்பட உள்ளது. அக்கூட்டத்தில் கோழிப்பண்ணையாளர்கள் தவறாமல் பங்கேற்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாய பயிற்சி**

ஆர்.எஸ்.மங்கலம் : ஆர்.எஸ்.மங்கலம் வட்டாரம் சோழந்தூரில் கோட்ட கரையாறு பாசன பகுதி விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. ஊராட்சி தலைர் ஜெயினுலாவுதீன் முன்னிலை வகித்தார். வேளாண் உதவி இயக்குனர் முகமது அப்துல் நசீர், பரமக்குடி வேளாண் அலுவலர் நாகராஜன், பொதுப்பணித் துறை உதவி செயற்பொறியாளர் சீனிவாசன், வேளாண் அறிவியல் மைய உதவி பேராசிரியர் அனுராதா, கவிதா பேசினர்.

**மூலிகைப் பயிருக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயம் மாநில கருத்தரங்கில் வேளாண் அமைச்சர் தகவல்**

சேலம்: ""நெல், கரும்புக்கு விலை நிர்ணயம் செய்வதுபோல் மூலிகைப் பயிர்களுக்கும் குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்யப்படும்,'' என, சேலத்தில் வேளாண் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் பேசினார். தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை சார்பில் மாநில அளவிலான மருத்துவப் பயிர்கள் சாகுபடி கருத்தரங்கம், கொள்முதல் - விற்பனையாளர் கூட்டமர்வு, கண்காட்சி துவக்க விழா சேலம் நேரு கலையரங்கில் நேற்று நடந்தது.

வேளாண் உற்பத்தி ஆணையர் நந்தகிஷோர் தலைமை வகித்தார். தமிழக வேளாண் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் கருத்தரங்கை துவக்கி வைத்தும், மருத்துவ பயிர் சாகுபடி குறித்த புத்தகத்தை வெளியிட்டு பேசியதாவது: தோட்டக்கலைத்துறை மூலம் மேற்கொள்ளப்படும் மூலிகைப் பயிர் சாகுபடியில் நல்ல லாபம் கிடைக்கும். இந்தியாவில் மருத்துவத்துக்கு என மூலிகையின் தேவை ஆண்டுக்கு 1.77 லட்சம் மெட்ரிக் டன்னும், கிராமப்புற மருத்துவத்துக்கு 86 ஆயிரத்து 500 மெட்ரிக் டன்னும் ஆகும். வெளிநாட்டு ஏற்றுமதிக்கு 56 ஆயிரத்து 500 மெட்ரிக் ன் தேவைப்படுகிறது. ஆண்டுக்கு 3.20 லட்சம்மெட்ரிக் டன் மூலிகை தேவைப்படுகிறது. நம் நாட்டில் சித்தா, ஆயுர்வேதிக், யுனானி போன்ற மருத்துவ முறைகளில் ஆண்டுக்கு 8 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் வியாபாரம் நடக்கிறது.

சித்த மருத்துவ மூலம் நிரந்தர குணமடையலாம். இவற்றின் மூலம் பக்கவிளைவு ஏற்பட வாய்ப்பில்லை. பண்டைய காலத்தில் சித்தர்கள் ஆராய்ச்சி செய்து மூலிகை மருத்துவத்தை உண்டாக்கினர். உலக அளவில் பார்க்கும்போது மருத்துவப் பயிர் வணிகம் 3 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் உள்ளது. இந்திய அளவில் 1,250 கோடி ரூபாய் மதிப்பில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மூலிகைப் பயிர் விவசாயம் அதிகளவில் செய்ய ஊக்குவிக்கும் நிலையில் அவர்களுக்கு கட்டுப்படியாகக்கூடிய விலை கிடைக்க வேண்டும். அந்த நோக்கில், மருத்துவப் பயிற்சிகளுக்கு தமிழக அரசு கொள்கை முடிவாக மெடிசன் பிளாண்ட் பாலிசி அடிப்படையில் கட்டுப்படியான விலை நிர்ணயம் செய்து அந்த விலைக்கு மேல் வெளிச்சந்தையில் விற்கவும், அந்த விலைக்கு குறைவாக வெளிச்சந்தையில் நிர்ணயிக்கப்பட்டால் அவற்றை அரசே டாம்கால் நிறுவனம் மூலம் கொள்முதல் செய்யவும் திட்டமிட்டுள்ளது.

கரும்புக்கு மத்திய, மாநில அரசுகள் விலை நிர்ணயம் செய்வதுபோல் மூலிகைப் பயிர்களுக்கும் குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இந்த முயற்சிக்கு துறை அலுவலர்கள், விவசாயிகள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இவ்வாறு அமைச்சர் பேசினார். தொடர்ந்து, வேளாண் துறையின் மூலம் 1,100 விவசாயிகளுக்கு ஒரு கோடியே 44 லட்சத்து 39 ஆயிரம் ரூபாய் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.
மத்திய சுகாதார இணை அமைச்சர் காந்திச்செல்வன், தோட்டக்கலை இயக்குனர் சந்திரமோகன், இந்திய மருத்துவ முதன்மை செயலர் ராஜ்குமார், தேசிய மருத்துவ பயிர்கள் வாரிய முதன்மை செயல் அலுவலர் சஜ்வான், வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி மற்றும் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

**எகிறி, மிரட்டிய காய்கறிகளின் விலை இன்னும் குறையும் : விளைச்சல், வரத்து அமோகம்**

சிவகங்கை : மாவட்டத்தில் விளைச்சல், வரத்து அதிகரிப்பால் காய்கறி விலை சரிந்துள்ளது. சபரிமலை, பழநி யாத்திர பக்தர்கள் விரதம் முடித்துள்ள நிலையில், மேலும் விலை குறையும் என எதிர் பார்க்கப்படுகிறது. இங்கு சிவகங்கை, காரைக்குடி, திருப்புத்தூரில் உழவர் சந்தைகள், உள்ளாட்சி அமைப்புகள் சார்பில் ஏராளமான தினசரி, வாரச்சந்தைகள் செயல்படுகின்றன.

விளைச்சல்: சிவகங்கை அருகே இடையமேலூர், சாலூர், பெரியகோட்டை, மலம்பட்டி, நாட்டரசன்கோட்டை, பூவந்தி, திருமாஞ்சோலை, காரைக்குடி அருகே பெரியகோட்டை, அரியக்குடி மற்றும் திருப்புவனம், தேவகோட்டையில் காய்கறிகள் விளைகின்றன. இவை தவிர உடுமலை, கொடைக்கானல், மதுரை, ஆண்டிபட்டி, தேனியில் இருந்தும் தினமும் 60 டன் காய்கறிகள் இங்கு வருகின்றன.

எகிறிய விலை: வழக்கமாக, புரட்டாசியில் காய்கறிகள் வரத்து அதிகரிக்கும். கடந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை தவறியதால், குறிப்பிட்ட காலத்தில், காய்கறி சாகுபடி செய்யப் படவில்லை. தேவை புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழியில் அதிகரித்த நிலையில், வரத்தும் குறைந்தததால், விலை உயர்ந்தது.

ஆறுதல்: நவம்பர், டிசம்பரில் பெய்த மழையை நம்பி விவசாயிகள் தக்காளி, வெண்டை, கத்தரி நடவு செய்தனர். இவற்றில் நல்ல விளைச்சல் கிடைத்துள்ளதால், வரத்து அதிகரித்துள்ளது. இதனால் விலையும் குறைந்து வருகிறது. இன்னும்: சிவகங்கை, காய்கறி மொத்த வியாபாரி எம்.ஆர்.ராஜேந்திரன் கூறியதாவது: விவசாயிகள் தாமதமாக, காய்கறி நடவு செய்தனர். தற்போது விளைச்சல் துவங்கியுள்ளது. சபரிமலை, பழநி யாத்திரை செல்லும் பக்தர்கள், தற்போது விதரம் முடித்து விட்டனர். இதனால் காய்கறி விலை குறைந்துள் ளது. வரும் நாட்களில் காய்கறி வரத்து அதிகரிக்கும். இதனால் மேலும் விலை குறையும், என்றார்.

குளிரூட்டும் நிலையம்: விளைச்சல் அதிகரித்துள்ள நிலையில், காய்கறிகளை அன்றாடம் விற்று தீர்க்க வேண்டிய நிலைக்கு, விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். இருப்பு வைத்து விற்கும் வசதி இல்லாததால், காய்கறிகள் அழுகி வீணாகும் சூழலும் உள்ளது. காய்கறிகளை இருப்பு வைக்க குளிரூட்டும் நிலையம் அமைத்தால், இதை தவிர்க்கலாம்.
இதுகுறித்து தோட்டக் கலை துறையினர் கூறியதாவது: காய்கறி விளையும் பகுதிகளில், ஒரே நாளில் 10 டன்னுக்கும் மேல் வரத்து இருந்தால் மட்டுமே, குளிரூட்டும் நிலையம் அமைக்க முடியும். மாவட்டத்தில் அந்த அளவு விளைச்சல் இல்லை. மேலும் விளைச்சல் அதிகரித்தால், சாத்தியக்கூறுகள் உள்ளன, என்றார்.

**நெற்பயிரில் குலைநோய்: தடுப்பது எப்படி?**

தேவகோட்டை : தேவகோட்டை அருகே குருந்தனக்கோட்டை, செலுகை, குமாணி, வீழிமார், சுற்று பகுதிகளில், நெற்பயிரில் புகையான், குலைநோய் தாக்கி உள்ளது.

விவசாய துணை இயக்குனர் சம்பத் கூறியதாவது: போதிய சூரிய வெளிச்சம் இல்லாமை, கூடுதல் தழைச்சத்து, பனியால் இந்நோய்கள் தாக்கியுள்ளன. இவற்றை கட்டுப்படுத்த, சூரிய ஒளி படும்படி 8 அடிக்கு ஒரு பட்டம் வீதம் பிரித்து, காற்றோட்ட வசதி உண்டாக்க வேண்டும். பூச்சிகளை இரவில் விளக்கு பொறி வைத்து அழிக்கலாம். குலை நோய்க்கு ஒரு ஏக்கருக்கு, "கார்பன்சிம்' -100 கிராம், "எடிபன்பாஸ்'- 200 மி.லி., "கிட்டாசின்'- 200 மி.லி., "பிளாஸ்டோகான்'- 120 கிராம் இவற்றில் ஏதாவது ஒன்றை தெளிக்கலாம்.

புகையான் நோய்க்கு, "பாசலோன்'- 400 மி.லி., "குளோரிபைரிபாய்'- 400 மி.லி., "டைகுளோர்வாய்'- 150 மி.லி., "மீதைல் டெமட்டோன்' -0. 400 மி.லி., இவற்றில் ஏதாவது ஒன்றை தெளிக்கலாம். தெளிப்பானுக்கு தக்கவாறு நீர் கலக்க வேண்டும், என்றார்.

**லாபம் மிகுந்த விறால் மீன் வளர்ப்பில் தொழில் முனைவோர் ஈடுபடலாம் : விஞ்ஞானிகள் அழைப்பு**

திருநெல்வேலி : லாபம் மிகுந்த விறால் மீன் வளர்ப்பு தொழிலில் நெல்லை மாவட்ட தொழில் முனைவோர்கள் ஈடுபடலாம் என பாளை. சேவியர் கல்லூரி நன்னீர் விறால் மீன் வளர்ப்பு மையத்தை ஆய்வு செய்த விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

பாளை. சேவியர் கல்லூரியில் நன்னீரில் விறால் மீன் வளர்ப்பு, ஆராய்ச்சி மையம் கடந்த 2008ம்ஆண்டு செப்டம்பரில் துவக்கப்பட்டது. புதுடில்லி தேசிய விவசாய ஆராய்ச்சி கவுன்சில் அளித்த 3.2 கோடி ரூபாய் நிதியுதவியின் மையம் இயங்கிவருகிறது. விறால் மீன் குஞ்சு உற்பத்தியை 1 லட்சத்தில் இருந்து 5 லட்சமாக உயர்த்துவது, உற்பத்தியை 25 டன்னில் இருந்து 200 டன்னாக உயர்த்துவதை நோக்கமாக கொண்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. புவவேஸ்வர் நன்னீர் மீன்வளர்ப்பு மத்திய மையம், சென்னை புதுகல்லூரியும் இத்திட்டத்தில் இணைந்து செயல்படுகிறது. ஆரைக்குளம், முக்கூடல், சுத்தமல்லி, கிருஷ்ணாபுரம், வல்லநாடு, ஸ்ரீவைகுண்டம், மன்னார்புரத்தில் விறால்மீன் குஞ்சு உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது.

**அதிகாரிகள் ஆய்வு :** புதுடில்லி தேசிய விவசாய ஆராய்ச்சி கவுன்சில் நிறுவனத்தை சேர்ந்த அகர்வால், புவனேஸ்வர் மத்திய நன்னீர் மீன்வளர்ப்பு நிறுவனத்தை சேர்ந்த விஞ்ஞானி சாகு, விஞ்ஞானி ஹனிபா, தூத்துக்குடி மீன்வளர்ப்புக்கல்லூரி முன்னாள் டீன் சுந்தர்ராஜன் உள்ளிட்ட குழுவினர் சேவியர் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள நன்னீர் விறால் மீன் வளர்ப்பு மையத்தை பார்வையிட்டனர். மீன் குஞ்சுகள் உற்பத்தி, விறால் மீன் வளர்ப்பு முறைகளை ஆய்வு செய்தனர். கல்லூரி முதல்வர் அல்போன்ஸ்மாணிக்கம், ஜான் டி.பிரிடோ உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

**விறால் மீன் வளர்ப்பு பாளை. யில் பயிற்சி :** பின்னர் அவர்கள் கூறியதாவது: விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்வளர்ப்பு தொழிலில் உற்பத்தியை பெருக்கவும், ஆராய்ச்சி மேற்கொள்ளவும் உலக பாங்க் முதற்கட்டமாக 1,200 கோடி ரூபாயை அளித்துள்ளது. விறால் மீன் வளர்ப்பு நம் பகுதிக்கு ஏற்ற தொழில். லாபகரமானது. நன்னீரில் வளர்க்கப்படும் முதல்தரமான விறால் மீன்கள் தோல் மூலம் மட்டுமின்றி தண்ணீருக்கு வெளியேயும் சுவாசிக்கும் திறன் கொண்டவை.
விறால் மீனில் முள் இருக்காது. மருத்துவக்குணம் அதிகமுள்ளது. உணவுக்கு பயன்படுத்தலாம். சுவை மிகுந்தது. வெளிநாடுகளில் விறால் மீனுக்கு கடும் கிராக்கி உள்ளது. தமிழகம், ஓரிசாவில் விறால் மீன் வளர்ப்பை ஊக்குவிக்க திட்டமிட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
பாளை. சேவியர் கல்லூரியில் பிப்ரவரி 2, 3 தேதிகளில் விறால் மீன் வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் நடக்கிறது. விறால் மீன் வளர்ப்புத்தொழிலில் ஈடுபட முதற்கட்டமாக 25 ஆயிரம் ரூபாய் முதலீடு போதுமானது. இடவசதி, தண்ணீர் இருக்க வேண்டும். விறால் மீன் வளர்ப்பில் ஆர்வமுள்ளவர்கள் முகாமில் பங்கேற்கலாம்.
விறால் மீன் வளர்ப்பு, வளர்ச்சி முறைகள், தொழில் நுட்ப முறைகள் குறித்த விளக்க கையேடுகள், சி.டி.,க்கள் வழங்கப்படும். கள ஆய்வு மூலம் தொழில்நுட்ப விளக்கங்கள் அளிக்கப்படும். படக்காட்சிகள் காட்டப்படும். ஆர்வமுள்ள, தகுதிவாய்ந்தவர்களுக்கு பாங்க் கடன், மானியம் பெற்றுத்தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**வேளாண்மை விஞ்ஞானிகள் ஆய்வு**
தென்காசி: சாம்பவர்வடகரையில் செம்மை நெல் சாகுபடி திடலை வேளாண்மை விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனர்.செங்கோட்டை வட்டாரம் சாம்பவர்வடகரையில் ஒருங்கிணைந்த தானிய உற்பத்தி திட்டத்தின் கீழ் செம்மை நெல் சாகுபடி தொகுப்பு திடல் அமைக்கப்பட்டுள்ளது. இத்திடலில் ஆடுதுறை-45, கோமல் போன்ற நெல் ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இத்தொகுப்பு திடலை அம்பாசமுத்திரம் நெல் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் நல்லையா, துரைராஜ்,

இளஞ்செழியன் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.விவசாயிகள் விஞ்ஞானிகளிடம், "ஏக்கருக்கு நெல் விதையை 3 கிலோ மட்டும் பாவினோம். விதைத்த 12ம் நாளே 25க்கு25 செ.மீ.இடைவெளியில் மார்க்கர் மூலம் நடவு செய்தோம். கோனோவீடார் மூலம் நான்கு முறை களைகளை நீக்கினோம்' என்றனர்.நல்ல முறையில் செம்மை நெல் சாகுபடி திடல் அமைக்கப்பட்டுள்ளதாக கூறி விஞ்ஞானிகள் பாராட்டினர். கோனோவீடார் களைக்கொல்லி மூலம் களை நீக்குவதால் களைகள் நீக்கப்பட்டு, களைகள் உரமாக்கப்படுகின்றன. பயிர்களின் வேர்களுக்கு நல்ல காற்றோட்டம் கிடைக்கிறது. வேர்கள் வளர்ச்சி அதிகமாகி பயிர்கள் நன்கு வளர்ந்து நல்ல மகசூல் கிடைக்கும். வரும் காலங்களில் செம்மை நெல் சாகுபடி முறையை விவசாயிகள் தொடர்ந்து கடைபிடிக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் கூறினர்.ஏற்பாடுகளை வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன், துணை வேளாண்மை அலுவலர் சுப்பிரமணியன், உதவி வேளாண்மை அலுவலர் கண்ணன் செய்திருந்தனர்.

**நெல் ஈரப்பத அளவை அதிகரிக்க குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தல்**

திருவாரூர் : நெல் கொள்முதலின் போது ஈரப்பதத்தை அதிகரிக்க வேண்டும் என்று குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.திருவாரூர் கலெக்டர் அலுவலகத்தில் மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. இதில் தலைமை வகித்து கலெக்டர் சந்திரசேகரன் பேசியதாவது:
தற்போது திருவாரூர் மாவட்டத்தில் 63 ஆயிரம் ஏக்கரில் சம்பா அறுவடைப்பணிகள் நடந்து முடிந்துள்ளன. அதிகபட்சமாக ஏக்கருக்கு 7 ஆயிரத்து 200 கிலோ மகசூல் கிடைத்துள்ளது.
சராசரியாக 5 ஆயிரத்து 200 கிலோ மகசூல் கிடைத்துள்ளது. அடுத்ததாக மாவட்டத்தில் மொத்தம் 1 லட்சத்து 75 ஆயிரம் ஏக்கரில் உளுந்து, பயறு வகைகள் பயிரிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.
அதில் இதுவரை 63 ஆயிரம் ஏக்கரில் உளுந்து, 40 ஆயிரம் ஏக்கரில் பயறு ஆகியவை பயிரிடப்பட்டுள்ளன. உளுந்து மற்றும் பயறு விதைகள் தேவையான அளவு கையிருப்பில் உள்ளது.
விதை கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டால் உடன் அவர்கள் தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம்.உளுந்து, பயறு வகைகளுக்கு ஒரு கிலோவிற்கு 20 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. மேலும் 50 சதவீத மானியத்தில் பயிர் பாதுகாப்பு மருந்துகள் விற்கப்பட்டு வருகிறது. இதற்காக அரசு 16 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. நடப்பாண்டு விவசாயிகளுக்கு பயிர்க்கடனாக குறிப்பிடப்பட்ட இலக்கையும் தாண்டி வணிக மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலம் 456 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது.மாவட்டம் முழுவதும் 320 நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டு நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. குறைபாடுகளை கண்காணிக்க நெல் கொள்முதல் நிலைய அதிகாரிகள் தவிர 7 தாலுகாவிற்கும் 7 துணை கலெக்டர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றார்.

கூட்டத்தில் நடந்த விவாதம்:மாசிலாமணி: திருவாரூர் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் ஆழ்குழாய் கிணறு அமைக்க மானியம் பெற்றுத் தரவேண்டும். வாழை உட்பட பல்வேறு தோட்டப்பயிர்களை வளர்க்குமாறு ஊக்கப்படுத்த தோட்டக்கலைத்துறை முன் வரவேண்டும். ஊடு பயிராக கோகோ பயிரிட அரசு அனுமதி பெற்றுத்தர வேண்டும். அதற்கான விதையையும் அரசு பெற்றுத்தர வேண்டும்.பி.ஆர்.பாண்டியன்: நெல் கொள்முதல் நிலையங்களில் இடைத்தரகர்களை தடுத்து நிறுத்த வேண்டும். ஈரப்பதத்தை காரணம் காண்பித்து நெல்லை தட்டிக்கழிக்க கூடாது. மரபணு மாற்றப்பட்ட கத்திரிக்காய் பயன்படுத்தும் விவகாரத்தில் அரசு நிரந்தர தடை ஆணை வெளியிட வேண்டும்.பழனிவேலு: ஒரு குவிண்டால் நெல் அறுவடை செய்து கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டு வரும் போது 280 ரூபாய் வரை செலவாகிறது. எனவே அரசு ஊக்கத் தொகையை குறைவில்லாமல் கொடுக்க வேண்டும். நெல் அறுவடை செய்ய கூடுதல் இயந்திரங்கள் வழங்க வேண்டும். நெல் ஈரப்பத அளவை அதிகரிக்க வேண்டும்.
சத்தியநாராயணா: சிறு, குறு விவசாயிகள் இதர விவசாயிகள் என்று அரசு பாரபட்சம் காட்டாமல் அனைவருக்கும் ஒரே விதத்தில் வங்கிக்கடன் வழங்க வேண்டும். செயின் இணைக்கப்பட்ட நெல் அறுவடை இயந்திரங்களை வேளாண் துறை வழங்க வேண்டும்.நெடுவை ராஜதுரை: விண்ணப்பித்த அனைத்து விவசாயிகளுக்கும் அரசு உடன் மின்இணைப்பு வழங்க வேண்டும். மீன் வளர்ப்பிற்காக பண்ணை குட்டை அமைக்கும் போது அரசு மின் கட்டணத்தில் சலுகை வழங்க வேண்டும்.கோவிந்தராஜ்: முள்ளியாறு பகுதியில் 2 முறை தடுப்புச்சுவர் கட்டியும்

உடைந்து விட்டது.

எனவே அந்த பகுதியில் நாணல் வளர்த்தால் தடுப்புச்சுவர் கட்ட வேண்டிய அவசியம் இருக்காது. கரையும் பாதுகாப்பாக இருக்கும். நெல் ஈரப்பத அளவை அதிகரித்து நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும்.முகமது யூனுஸ்: வேளாண் துறை மூலம் உளுந்து பயிர் விவசாயிகளுக்கு தேவையான அளவு வழங்க வேண்டும். நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் தூற்றும் போது அவசரம் காட்டாமல் மெதுவாக தூற்ற வேண்டும்.ஜெயராமன்: இயற்கை உரங்களை பயன்படுத்தி செம்மை நெல் முறையில் சாகுபடி செய்ததில் ஒரு ஏக்கருக்கு 4 ஆயிரத்து 100 ரூபாய் தான் செலவானது. ஆனால் மகசூல் 12 மூட்டை கிடைத்துள்ளது. எனவே இயற்கை விவசாயத்தை வேளாண் துறை ஊக்கப்படுத்த வேண்டும்.கந்தசாமி: கோரையாறு, பாமணியாறுகளில் உள்ள மணல் திட்டுக்களை இப்போதே அகற்றும் பணியில் பொதுப்பணித்துறை ஈடுபட வேண்டும். அப்போது தான் அடுத்த கட்ட விவசாயம் சிறப்பானதாக இருக்கும்.இவ்வாறு விவாதம் நடந்தது.டி.ஆர்.ஓ., ஜான்லூயிஸ், வேளாண் இணை இயக்குனர் அன்பழகன், நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மண்டல மேலாளர் ஜெயவீரரமணி, நெடுஞ்சாலைத்துறை கோட்டப் பொறியாளர் ராமச்சந்திரன், வெண்ணாறு வடிகால் கோட்ட செயற்பொறியாளர் கண்ணன், உதவி செயற்பொறியாளர் தட்சிணாமூர்த்தி, முன்னோடி வங்கி மேலாளர் பாண்டியன், மின்வாரிய கோட்டப் பொறியாளர் சத்தியநாராயணா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு விதை பயிற்சி**

திருப்பத்தூர்: திருப்பத்தூர் அடுத்த லக்கிநாயக்கன்பட்டியில் விவசாயிகளுக்கு வேளாண் துறை சார்பில் விதை குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. திருப்பத்தூர் அடுத்த லக்கிநாயக்கன்பட்டி கிராமத்தில், விதை கிராம திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப் பட்டது. பயிற்சிக்கு லக்கிநாயக்கன்பட்டி பஞ்., தலைவர் தமயேந்திரன் முன்னிலை வகித்தார். கந்திலி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் (பொறுப்பு) ராகினி தலைமை வகித்தார். பயிற்சியில், திருப்பத்தூர் விதைசான்று அலுவலர் சுரேஷ் கலந்துகொண்டு விதை கிராம திட்டத்தின் நோக்கம், விதைப்பண்ணை அமைத்தல், ஆதார விதை, சான்று விதை உற்பத்தி மற்றும் பயறுவகை விதை உற்பத்தியை அதிகரிக்கும் வழிமுறைகள் பற்றி பேசினார். செம்மைநெல் சாகுபடி தொழில்நுட்பங்கள், பயறுவகை சாகுபடி தொழில் நுட்பங்கள் மற்றும் இறவையில் சாகுபடி செய்யப்படும் துவரை, பச்சைப்பயறு, காராமணி ஆகிய பயறு வகைகளின் புதிய ரகங்கள், உற்பத் தியை பெருக்கும் வழிமுறைகள் நுண்ணூட்ட கலவை மற்றும் உயிர் உரம் இடுவதால் பயிருக்கு கிடைக்கும் நன்மைகள் பற்றி வேளாண்மை உதவி இயக்குனர் ராகினி விளக்கி கூறினார். வேளாண்மைத்துறை மூலம் வழங்கப்படும் நலத் திட்ட உதவிகள் குறித்து துணை வேளாண்மை அலுவலர் பத்மநாபன் பேசினார். பயிற்சியில் கலந்துகொண்ட விவசாயிகளுக்கு சான்று விதை மற்றும் வேளாண் இடுபொருட்கள் மானியத் தில் வழங்கப்பட்டது. பயறுவிதை சாகுபடி பற்றிய கை யேடும் வழங்கப்பட் டது. ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் கோவிந்தராஜ் செய்திருந் தார்.

**விவசாயிகளுக்கு 65 சதவீதம் மானியம்**

விருதுநகர் : விருதுநகர் வேளாண்மை விரிவாக்க மைய உதவி இயக்குனரின் செய்திக்குறிப்பு: தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் துல்லிய பண்ணைய சாகுபடி முறையில் மக்காச் சோளம், பருத்தி, கரும்புபோன்ற பயிர்களுக்கு சொட்டு நீர் பாசனம் அமைத்து நீரில் கரையும் உரங்களிட்டுபயிர் வளர்க்கும் திட்டம் தற்போது விருதுநகர் வட் டாரத்தில் செயல்பாட்டில் உள்ளது.

இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு 65 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. ஒரு விவசாயி ஒரு எக்டேர் விளை நிலப்பரப்பில் மட்டுமே சொட்டு நீர்பாசனம் அமைக்கவும் அதற்குத் தேவையான இடு பொருட்களை மானிய விலையில் பெறவும்தகுதியுடையவர் ஆவார். இத்திட்டத்தின் மூலம் பயன்பெற விரும்பும் விவசாயிகள் வட்டார

வேளாண்மை விரிவாக்க மையத்தை 04562 252 740 என்ற நம்பரில் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

**பாசன விவசாயிகள் அச்சம்**

உடுமலை : "பாம்பாற்றின் குறுக்கே கேரள அரசு அணை கட்டினால், அமராவதி பகுதி பாலைவனமாக மாறி விடும்' என, பாசன விவசாயிகள் கூட்டத்தில் அச்சம் தெரிவித்தனர்.
உடுமலை அருகே உள்ள அமராவதி அணைக்கு பெருமளவு நீர்வரத்துள்ள பாம்பாற்றின் குறுக்கே 230 கோடி ரூபாய் செலவில் கேரள அரசு அணை கட்ட திட்டமிட்டுள்ளது. இதுகுறித்து விவாதிக்க, அமராவதி பாசன விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு கூட்டம் நடந்தது. அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் சங்க தலைவர் வேலுசாமி தலைமை வகித்தார். பொது செயலாளர் சண்முகவேலு எம்.எல்.ஏ., முன்னிலை வகித்தார். உடுமலை, தாராபுரம், சின்ன தாராபுரம், கரூர் பகுதி, பழைய, புதிய ஆயக்கட்டு விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

கல்லாபுரம் ராமகுளம் வாய்க்கால் பாசன விவசாயிகள் சங்க தலைவர் மாரியப்பன் பேசியதாவது: அமராவதி அணைக்கு 60 சதவீதம் வரை நீர் வரத்து பாம்பாற்றின் மூலமே கிடைக்கிறது. அமராவதி அணையின் உப நதிகளாக உள்ள எட்டு ஆறுகளின் குறுக்கே அணை கட்டியதால், கரூர் வரை உள்ள பாசனம் மற்றும் குடிநீர் ஆதாரத்திற்கு அணையையே நம்பியிருக்க வேண்டியுள்ளது.
காவிரியின் துணை நதியாக உள்ளதால், நடுவர் மன்ற தீர்ப்பில் அமராவதியில் இருந்து மூன்று டி.எம்.சி., தண்ணீர் கொடுக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டது. இதுகுறித்த வழக்கு, உச்சநீதிமன்றத்தில் உள்ள நிலையில், மூன்று டி.எம்.சி., நீர் தந்தால் அமராவதி பகுதிகள் கடுமையாக பாதிக்கும் என விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்திய நிலையிலும், தமிழக அரசு காவிரி நடுவர் மன்றத்தில் அமராவதி அணை குறித்து அப்பீல் செய்யவில்லை.

அமராவதி பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு 16.5 டி.எம்.சி.,; புதிய ஆயக்கட்டு கட்டு பாசனத்திற்கு 4.97 டி.எம்.சி., மற்றும் குடிநீர், தொழிற்சாலை தேவைக்கு மொத்தம் 18.636 டி.எம்.சி., தண்ணீர் தேவை உள்ளது என தமிழக அரசு தொழில்நுட்ப ஆலோசகரே தெரிவித்துள்ளார். ஐந்தாண்டு சராசரியாக ஆண்டுக்கு எட்டு டி.எம்.சி., தண்ணீர் மட்டுமே அணைக்கு வந்துள்ளது.

பாம்பாற்றின் குறுக்கே கேரளா அரசு அணை கட்டுவதோடு, குளிர்பான நிறுவனங்களுக்கு தண்ணீர் பயன்படுத்தும் உரிமையை வழங்க திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது. இதனால், அமராவதி பாலைவனமாகி; செம்மறி ஆடு, கருவேலம் முள்பட்டியே அமராவதி விவசாயிகளின் வாழ்க்கையாக மாறி விடும் அபாயம் உள்ளது, என்றார்.
அமராவதி கரும்பு விவசாயிகள் சங்க செயலாளர் ஈஸ்வரன் பேசுகையில், ""அமராவதி விவசாயிகள் அமைதியாக இருக்காமல் அரசின் கவனத்திற்கு இப்பிரச்னையை எடுத்துச் செல்லும் வகையில் போராட்டங்கள் நடத்த வேண்டும்," என்றார்.

புதிய ஆயக்கட்டு பாசன விவசாயிகள் சங்க தலைவர் பார்த்தசாரதி, ""விவசாயிகள் சார்பில், மாவட்ட அமைச்சர் மற்றும் முதல்வரிடம் நேரடியாக மனு அளிக்க வேண்டும். அதற்கு பின்னரும் நடவடிக்கை இல்லை என்றால், மத்திய, மாநில அரசுகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் போராட்டம் நடத்த வேண்டும்," என்றார்.
விவசாய சங்க பிரதிநிதிகளின் கருத்துக்களின் அடிப்படையில், "கலெக்டர் மற்றும் மாவட்ட அமைச்சர், தமிழக முதல்வர் ஆகியோரிடம் நேரில் மனு அளிப்பது எனவும், தொடர்ந்து அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் வழக்கமான போராட்ட வடிவில் இல்லாமல், மூன்று மையங்களில் மறியல் போராட்டம் மற்றும் தொடர் போராட்டங்கள் நடத்துவது' எனவும் முடிவு செய்யப்பட்டது. இதன்பின், கலெக்டர் சமயமூர்த்தியிடம் விவசாயிகள் மனு அளித்தனர்.

**தென்மாவட்ட தொழிலாளர்களை அழைத்து வர விவசாயிகள் விரைவு**

பல்லடம் : மரம் ஏறும் தொழிலாளர் பற்றாக்குறையை போக்க, பல்லடம் மற்றும் சுல்தான்பேட்டையை சேர்ந்த தென்னை விவசாயிகள், தென்மாவட்டங் களுக்குச் சென்றுள்ளனர்; அங்குள்ள தொழிலாளர் களுக்கு 25 ஆயிரம் ரூபாய் முதல் 50 ஆயிரம் ரூபாய் வரை "அட்வான்ஸ்' கொடுத்து அழைத்து வருகின்றனர்.

பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரத்தில் தென்னை விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. இப்பகுதிகளில் மட்டும் எட்டு லட்சத்திற்கும் அதிகமான தென்னை மரங்கள் உள்ளன. விளையும் இளநீர், தேங்காய், திருப்பூர் மற்றும் கோவை, திண்டுக்கல், தூத்துக்குடி உட்பட பல இடங்களுக்கு தினமும் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. தோப்புகளில் விளைந்துள்ள தேங்காய், இளநீர் களை பறிக்க, போதிய அளவு மரம் ஏறும் தொழி லாளர்கள் கிடைப்பதில்லை. இதனால், ஆயிரக் கணக்கான தென்னை விவசாயிகள், தங்களது மரத் தில் காய்த்துள்ள தேங்காய் மற்றும் இளநீர்களை உரிய நாட்களில் தகுந்த பதத்தில் பறித்து, விற்பனை செய்ய இயலாமல் தவியாய் தவிக்கின்றனர்.

வழக்கத்தை விட, பறிப்பு கூலி அதிகமாக கொடுத்தும் தொழிலாளர் பற்றாக்குறை நீங்க வில்லை. 10 ஏக்கருக்கு மேல் தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகள், தூத்துக்குடி, நெல்லை, ராமநாதபுரம், கன்னியாகுமரி உள்ளிட்ட தென் மாவட்டங்களுக்கு சென்றுள்ளனர். அங்குள்ள மரம் ஏறும் தொழிலாளர்களை சந்தித்து, முன்பண மாக 25 ஆயிரம் ரூபாய் முதல் 50 ஆயிரம் ரூபாய் வரை கொடுத்து குடும்பத்துடன் தங்குமிடம் இல வசமாக தருகிறோம் என வாக்குறுதி அளித்து, அழைத்து வருகின்றனர்.
இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகள், உடு மலை மற்றும் பெரியபட்டி, பூளவாடி ஆகிய பகுதி களில் வசிக்கும் மரம் ஏறும் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 250 ரூபாய் முதல் 300 ரூபாய் வரை கூலி கொடுத்து, அழைத்து வருகின்றனர்.

**கால்நடை வளர்க்க சந்தேகமா '1551'க்கு 'டயல்' செய்யுங்க**

திருப்பூர் : ""கால்நடைகளை நாம் வளர்த்தால், கால்நடைகள் நம்மை வளர்க்கும் என்பதை எடுத்துச் சொல்வதற்காகவே, கால்நடை வளர்ப்பு பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன,'' என்று திருப்பூர் கால்நடை மருத்துவ பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத் தலைவர் செல்வராஜ் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது: கால்நடை வளர்ப்பை ஊக்கப்படுத்துவதற்காக, திருப்பூர் கால்நடை மருத்துவ பல்கலை மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில், கறவை மாடுகள், காடை, ஆடு, கோழி வளர்ப்பு பற்றி பயிற்சி அளிக்கப்படுகிறது. கடந்த 27, 28ம் தேதிகளில் கறவை மாடு, ஜப்பானிய காடை வளர்ப்பு பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது. இம்முகாம்களில், கோவை, திருப்பூர், பல்லடம், தாராபுரம் பகுதி விவசாயிகள், தொழில் ஆர்வலர்கள் பங்கேற்றனர். அடுத்த மாதம் ஆடு, நாட்டுக்கோழி வளர்ப்பு பற்றி பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

விவசாயிகள் மட்டுமின்றி தொழில் ஆர்வலர்கள் மற்றும் படித்த பட்டதாரிகளும் கால்நடை வளர்ப்பு பயிற்சிக்கு வருகின்றனர். முதலில் பால், இறைச்சி, முட்டை போன்ற கால்நடை உற்பத்தி பொருட்களுக்கான விற்பனை வாய்ப்பை ஆராயவும், அதிகப்படுத்துவது பற்றியும் அறிவுறுத்தப்படுகிறது. பின், கால்நடை வளர்ப்புக்கு இடம் தேர்வு செய்வது; கால்நடைகளை பராமரிப்பது; தடுப்பு ஊசிகள் போட வேண்டியதன் அவசியம்; தீவனம் வழங்கும் முறை தொடர்பான ஆலோசனை வழங்கப்படுகிறது. ஆலோசனை பெற 1551 என்ற இலவச தொலைபேசியிலும் தொடர்பு கொள்ளலாம்.

திருப்பூர் சுற்றுப்பகுதியில் கறவை மாடுகள், ஆடுகள் மற்றும் கோழி வளர்ப்பு அதிகம் உள்ளது. இவற்றை வளர்ப்பவர்களின் சந்தேகங்களுக்கு முறைப்படி விளக்கமும், ஆலோசனைகளும் வழங்கப்படுகிறது. கால்நடைகளை நாம் வளர்த்தால், கால்நடைகள் நம்மை வளர்க்கும் என்பதை எடுத்துச் சொல்வதற்காக, இத்தகைய பயிற்சி முகாம்கள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன.

பல்லடம், குண்டடம் உள்ளிட்ட பகுதிகளில் காடை வளர்ப்பு அதிகம் உள்ளது. 500க்கும் மேற்பட்ட பண்ணைகளில் காடைகள் வளர்க்கப்படுகின்றன. நம் நாட்டில் ஜப்பானிய காடை இனத்தை மட்டுமே அதிக அளவில் வளர்க்கலாம். ஆழ்கூள முறை, கூண்டு முறையில் காடைகள் வளர்க்கப்படுகின்றன.

விற்பனை பருவத்தில் ஆண் காடை 190 கிராம் வரையும், பெண் காடை 210 கிராம் வரையும் எடை இருக்க வேண்டும். 500 பெண் காடைகளை கொண்டு, வாரத்திற்கு 1,500 காடை குஞ்சுகளை உற்பத்தி செய்ய முடியும். மிகவும் சுவையாக இருப்பதால், ஓட்டல்களில் காடை இறைச்சிக்கு அதிக வரவேற்பு உள்ளது. அதிக புரதமும், குறைந்த கொழுப்பும் இருப்பதால், குழந்தைகள், முதியவர்களுக்கு ஏற்ற அசைவ உணவாக கருதப்படுகிறது. இவ்வாறு, செல்வராஜ் கூறினார்.

**அறுவடைக்கு தயாரான நெல் பயிரில் நோய் தாக்குதலால் அதிர்ச்சி : மடத்துக்குளம் விவசாயிகள் கவலைதொழிலாளர் பற்றாக்குறையால் மக்காச்சோளம் அறுவடை பாதிப்பு**

மடத்துக்குளம் : மடத்துக்குளம் பகுதியில் தொழிலாளர் பற்றாக்குறையால் மக்காச்சோளம் அறுவடை பணி பாதிக்கப்பட்டுள்ளது.

கிராமங்களில் உள்ள விவசாய தொழிலாளர்கள் பெரும்பகுதியினர் தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தால் பயன் பெற்று வருகின்றனர். இத்திட்டத்தில், குறிப்பிட்ட அளவு வேலை நேரமும், வேலையின் அளவும் வரையறுக்கப்பட்டுள்ளதால் இத்திட்டத்துக்கு தொழிலாளர்கள் மத்தியில் வரவேற்பு உள்ளது. மடத்துக்குளம் புதிய ஆயக்கட்டு பகுதியில் ஐந்து ஆயிரம் ஏக்கருக்கு மேல் சாகுபடி செய்யப்படிருக்கும் மக்காச்சோளம் அறுவடைக்கு தற்போது தொழிலாளர் பற்றாக்குறையாக உள்ளது.

மடத்துக்குளம் ஒழுங்கு முறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் ஜான்சன் கூறியதாவது: கடந்த ஆண்டுகளில் ஜனவரி தொடக்கத்திலேயே மக்காச்சோளம் அறுவடை தொடங்கிவிடும் எங்கள் குடோன் இருப்புக்கும் வந்துகொண்டிருக்கும், தற்போது மூட்டைக்கு ரூபாய் 880 விலை கிடைக்கும் நிலையிலும் அறுவடைக்கு ஆட்கள் கிடைப்பதில்லை என்றார்.

**பயறு வகை செடிகளில் பூச்சி தொல்லை**

பொங்கலூர் : வேளாண் துறை சார்பில் வயல் சூழல் ஆய்வு நிகழ்ச்சி, கண்டியன்கோவில் ஊராட்சியில் நடந்தது. பொங்கலூர் துணை வேளாண் அலுவலர் அர்ஜுனன் தலைமையில் வயல் சூழல் நிகழ்ச்சி, முத்துசாமி தோட்டத்தில் நடந்தது. "பயறு வகை செடிகளில் பூச்சித்தொல்லை அதிகமாக இருப்பதாகவும், வெங்காயப் பயிரில் வேர் அழுகல் நோயை கட்டுப்படுத்த முடியவில்லை; தென்னையில் மரங்கள் காய் பிடிக்காமல் மட்டைகள் சிறுத்துப்போகிறது' என, விவசாயிகள் புகார் கூறினர்.

வேளாண் துறை அலுவலர் அர்ஜுனன் கூறுகையில், ""நன்மை செய்யும் பூச்சிகள், தீமை செய்யும் பூச்சிகளை ஆய்வு செய்து, தீமை செய்யும் பூச்சிகள் அதிகம் இருந்தால், மருந்து தெளிக்க வேண்டும்; நன்மை செய்யும் பூச்சிகள் அதிகம் இருந்தால், இயற்கையிலேயே கட்டுப்படுத்தப்படும்; பயறு வகை பயிர்களுக்கு வேளாண் துறையால் பரிந்துரைக்கப்படும் வேப்ப எண்ணெய் கலந்த மருந்துகளை தெளிக்க வேண்டும்; வீரிய மருந்துகளை தெளிப்பதால்

ஒரு பூச்சி அழிந்தால், வேறொரு பூச்சி உற்பத்தியாகி விடும்; பூச்சித் தாக்குதல் மாலை நேரத்தில் அதிகமாக இருக்கும்; ஆகவே, மாலை நேரத்தில் மருந்து தெளிக்க வேண்டும்.

""வெங்காய பயிரில் வேர் அழுகல் நோயை கட்டுப்படுத்த சூடோமோனஸ் என்ற மருந்தை ஏக்கருக்கு நான்கு கிலோ வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து நீர் பாய்ச்ச வேண்டும்; தென்னைக்கு நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறையால் நோய் ஏற்படுகிறது; நுண்ணூட்டச்சத்து கொடுப்பதன் மூலம் மரத்தின் காய் பிடிப்புத் திறனை அதிகப்படுத்தலாம்; சிவப்பு கூன் வண்டு காணப்பட்டால் சல்பாஸ் மாத்திரையை, மரத்தை துளையிட்டு வைக்க வேண்டும். மருந்து, உரம் போன்றவை வேளாண் துறையில் கிடைக்கிறது,'' என்றார். உதவி வேளாண் அலுவலர் ஜோகி மற்றும் அப்பகுதி விவசாயிகள் பங்கேற்றனர்.

**இயந்திரத்தில் மக்காச்சோளம் அறுவடை : தீவனப்பயிர்களுக்கு திடீர் தட்டுப்பாடு**

உடுமலை : இயந்திரங்கள் மூலம் மக்காச்சோளம் அறுவடையை மேற்கொள்ள விவசாயிகள் ஆர்வம் காட்டுவதால், கால்நடை தீவனங்களுக்கு பயிர்கள் கிடைக்காமல் விலை உயர்ந்து வருகிறது.

உடுமலை பகுதியில் பி.ஏ.பி., மற்றும் கிணற்றுப்பாசனத்துக்கு அனைத்து சீசன்களில் பல ஆயிரம் ஏக்கரில் மக்காச்சோளம் பயிரிடப்படுகிறது. வேலை உறுதியளிப்பு திட்டம் செயல்படுத்திய பின், மக்காச்சோளம் சாகுபடிக்கும் தொழிலாளர் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், மக்காச்சோளம் அறுவடை செய்வதற்கு இயந்திரத்தை, தற்போது பயன்படுத்தி வருகின்றனர். பழனி மற்றும் ஒட்டன்சத்திரம் பகுதிகளில் இருந்து கொண்டு வரப்பட்டுள்ள இயந்திரத்தின் மூலம் அறுவடை செய்ய ஒரு மணி நேரத்துக்கு இரண்டாயிரம் ரூபாய் வாடகை வசூலிக்கப்படுகிறது. பல விவசாயிகள், இயந்திர அறுவடை முறையை பின்பற்றுவதால், பயிர்கள் வீணாகி, தீவனத்துக்கு தட்டுப்பாடு ஏற்படும் நிலை உள்ளது.

ஒரு ஏக்கர் மக்காச்சோள தட்டு கடந்தாண்டு 1,500 ரூபாய்க்கு விற்கப்பட்டது. தற்போது, 2,500 ரூபாயாக உயர்ந்துள்ளது. பால் கொள்முதல் விலை உயர்வு போன்ற காரணங்களால், மாடு வளர்ப்பு அதிகரித்துள்ளது. மாடுகளுக்கு தேவையான தீவனங்களை வாங்கி இருப்பு வைக்க, பல மாவட்ட விவசாயிகள் உடுமலை பகுதியை முற்றுகையிடுகின்றனர்; போதிய அளவு பயிர் கிடைக்காததால் ஏமாற்றமடைந்து திரும்பி செல்கின்றனர். தட்டுப்பாடு நிலவுவதால், அதிக விலைக்கு மக்காச்சோள தட்டுகளை வாங்கி, டிராக்டரில் பல மடங்கு ஏற்றிச்செல்வதும் அதிகரித்துள்ளது.

தினகரன்

**குறைந்த விலையில் பருப்பு விற்க முடிவு**

பதிவு செய்த நாள் 1/29/2010 12:19:20 AM



நாகர்கோவில் : கூட்டுறவு கடைகளில் குறைந்த விலையில், துவரம் பருப்பு விற்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் 7500 டன் துவரம் பருப்பு கொள்முதல் செய்யப்படுகிறது.

தமிழகத்தில் பருப்பு வகைகளின் மொத்த விலை குறைந்த போதிலும், சில்லறை விலை குறையவில்லை. வெளிச்சந்தையில் துவரம் பருப்பு விலை கிலோ ரூ.80வரை விற்கப்படுகிறது. விலையை குறைக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

கூட்டுறவு மொத்த பண்டக சாலைகள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தும் அமுதம் பல்பொருள் அங்காடிகள் மூலமாக துவரம் பருப்பு முதல் ரகம், 2ம் ரகம் மற்றும் கனடா பருப்பு ஆகியவற்றை அடக்க விலையிலேயே விற்க அரசு முடிவெடுத்துள்ளது.

இதற்காக, நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் 7500 டன் துவரம் பருப்பு கொள்முதல் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. கொள்முதல் செய்யப்படும் துவரம் பருப்பு சிறப்பு விற்பனை பிரிவுகள் மூலமாக விற்கப்படும் என தெரிகிறது.

**சுய உதவி குழுக்களுக்கு அடையாள அட்டை**

பதிவு செய்த நாள் 1/29/2010 1:12:20 AM




அரக்கோணம் : தமிழகம் முழுவதும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், தனி நபர் வருமானம் பெருக்கும் நோக்கத்திலும் மகளிர் சுய உதவிகுழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்த குழுக்களுக்கு சுழல்நிதி கடன், பொருளாதார கடன், வங்கிக் கடன் உள்ளிட்ட பல்வேறு உதவிகள் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில், சில பகுதிகளில் ஒரு குழுவில் உள்ள உறுப்பினர்களே வேறு குழுக்களிலும் இடம் பெறுகின்றனர். இதனால், குழுக்களை ஒருங்கிணைக்கும் தொண்டு நிறுவனங்கள், சுழல் நிதி உள்பட சலுகைகளில் முறைகேடுகள் செய்வதற்கு வாய்ப்புள்ளது. இதை தடுப்பதற்காகவும், குழுக்களுக்கு தனி அங்கீகாரம் கிடைக்கும் வகையிலும் எல்லா குழுக்களுக்கும் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கும் பணி, தமிழகம் முழுவதும் தொடங்கப்பட்டுள்ளது.

வேலூர் மாவட்டத்தில் மட்டும் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்களை கொண்ட 14,000 மகளிர் சுய உதவி குழுக்கள் உள்ளன. இவற்றில் முதல் கட்டமாக 11,500 குழுக்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட உள்ளது. இதற்காக புகைப்படம் எடுக்கும் பணி நடந்து முடிந்துள்ளது.

இப்போது 5,000 உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் பணி மும்முரமாக நடந்து வருகிறது. மஞ்சள் நிறத்தில் உள்ள இந்த அட்டைகளில் குழுவின் பெயர், உறுப்பினர்கள் பெயர், மற்றும் குழு பயன்பெறும் கடன் உதவி விவரம் ஆகியவை புகைப்படத்துடன் இடம் பெற்றுள்ளது.

### ராமநாதபுரத்தில் பயிர்களில் நெற்பழம் நோய் தாக்குதல்

பதிவு செய்த நாள் 1/29/2010 12:59:40 AM

ராமநாதபுரம் : ராமநாதபுரம் மாவட்டத்தில் நெற் பயிரில் நெற்பழம் நோய் தாக்குதலை தடுக்கலாம் என வேளாண்மை இணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் ராமநாதபுரம், திருவாடானை மற்றும் ஆர்.எஸ்.மங்கலம் ஒன்றியப் பகுதிகளில் நெல் பயிரில் புகைĔயன் மற்றும் நெற்பழம் நோய் தாக்கி நூற்றுக்கணக்கான ஏக்கர் பாதிக்கப்பட்டுள்ளன. நெல் மணிகள் பிடிக்கும் வேளையில் இந்த நோய்கள் தாக்கியதால் விவசாயிகள் மிகவும் வருத்தமடைந்தனர்.

இதுகுறித்து விவசாயத்துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகளும், விவசாய சங்க நிர்வாகிகளும் கோரிக்கை விடுத்தனர்.

இதுகுறித்து ராமநாதபுரம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சத்தியமூர்த்தி கூறுகையில், Ôராமநாதபுரம் மாவட்டத்தில் இந்தாண்டு 1.36 லட்சம் ஹெக்டேரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் முதல் முறையாக நெற்பயிரியில் நெற் பழம்(லெட்சுமி) என்ற நோய் தாக்கியுள்ளது. இந்நோய் நெற் பயிரின் பால் பிடிக்கும் தருவாயில் ஏற்படுகிறது. பூஞ்சான நோயான இது வயல் முழுவதும் பாதிப்பு ஏற்படாது. இது பனிப்பொழிவு அதிகமான நேரங்களிலும், பயிர் நெருக்கமாக காற்றோட்ட வசதியாக இல்லாததாலும் ஏற்படுகிறது. அதிகமாக தழைச்சத்துள்ள யூரியாவை நெற்பயிருக்கு இடுவதாலும் ஏற்படுகிறது. மற்றொரு காரணமாக ராமநாதபுரம் மாவட்டத்திற்கு ஏற்றவகை இல்லாத நெல் ரகங்களை பயிரிட்டுள்ள னர்.

குறிப்பாக கர்நாடகா பொன்னி என்று சொல்லப்படும் பிபிடி 5204, ஜேசிஎல், மனிஷா ஆகிய ரகங்களில் இந்நோய் தாக்கியுள்ளது. இந்த நெல் ரகங்கள் நல்ல விலைக்கு போவதால் விவசாயிகள் இதை பயிரிட்டுள்ளனர். ராமநாதபுரம் மாவட்டத்தில் பயிர் செய்வதற்கு ஆடுதுறை 33, 39,45, ஐ.ஆர்.36 ஆகிய நெல் ரகங்களே ஏற்றது. மாவட்டத்தில் புகையான் நோய் தாக்கியும் நெல் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த பூச்சி நோய் பயிரின் அடிப்பாகத்தில் தூர்கட்டும் பருவம் முதல் அறுவடை பருவம் முடிய தாக்குதல் காணப்படும்.

புகையான் நோய் தாக்குதலை தடுக்க, ஒரு ஹெக்டேருக்கு 750 கிராம் அசிபேட் மருந்தை 200 லிட்ட தண்ணீரில் கை தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். நெற்பழம் நோயை தடுக்க, மேங்கோசெப் மருந்தை ஒரு லிட்டருக்கு 2 கிராம் என்ற அளவில் ஒரு ஹெக்டேருக்கு 200 லிட்டர் நீரை கைத் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். ராமநாதபுரம் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளை, கடந்த வாரம் மதுரை வேளாண்மைக் கல்லூரி பூச்சியியல் துறை உதவி பேராசிரியர் சீனிவாசன், நோயியல் துறை உதவி பேராசிரியர் ஏசுராஜ் மற்றும் குழுவினர், வேளாண்மைத்துறை அலுவலர்கள் சென்று ஆய்வு செய்தோம் என்றார்.

தினத்தந்தி

### குறுவை விளைச்சல் பாதிப்பு:
### அரசு நெல் கொள்முதல் 3 மடங்கு குறைந்தது
### அரிசி இருப்பு உள்ளதால் பிரச்சினை இல்லை

*சென்னை, ஜன.29–*
*தமிழகத்தில் குறுவை விளைச்சல் பாதித்ததால், அரசு நெல் கொள்முதல் 3 மடங்கு குறைந்துள்ளது. ஆனால், போதிய கையிருப்பு உள்ளதால் அரிசி தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.*

*குறுவை விளைச்சல் பாதிப்பு*

*தமிழகத்தில் தஞ்சை, திருச்சி, திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், புதுக்கோட்டை, பெரம்பலூர், கரூர், பெரம்பலூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் 1016 நெல் கொள்முதல் நிலையங்களை அரசு வைத்திருக்கிறது. இதுபோல், டெல்டா அல்லாத மாவட்டங்களில் 1052 நெல் கொள்முதல் நிலையங்களும் உள்ளன. இந்த நெல் கொள்முதல் நிலையங்களில், குறுவை சாகுபடி காலத்தில் மிகவும் குறைவான அளவிலேயே நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.*
*குறுவை சாகுபடி காலத்தில், போதிய மழை இல்லாமை, மேட்டூர் அணையில் இருந்து உரிய நேரத்தில் கிடைக்காமை போன்ற பல்வேறு காரணங்களால், விளைச்சல் மிகவும் குறைந்தது. இதன் காரணமாக அரசு கொள்முதல் நிலையங்களில், முந்தைய குறுவை சாகுபடி காலத்தை விட, இந்த குறுவை சாகுபடி காலத்தில் நெல் கொள்முதல் வெகுவாக குறைந்துள்ளது.*

*நெல் கொள்முதல் குறைந்தது*

*தமிழகத்தில் கடந்த குறுவை சாகுபடிக் காலத்தில், 2008 அக்டோபர் 1–ந் தேதி முதல் 2009 ஜனவரி 27–ந் தேதி வரை 44 லட்சத்து 49 ஆயிரத்து 946 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால், இதே காலகட்டத்தில், இந்த விளைச்சல் ஆண்டில் குறுவை காலத்தில், 2009 அக்டோபர் 1–ந் தேதி முதல், 2010 ஜனவரி 27–ந் தேதி வரை, 10 லட்சத்து 81 ஆயிரத்து 71 டன் அளவிலான நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இது கிட்டத்தட்ட 3 மடங்கு குறைவாகும்.ஆனால், இவ்வளவு நெல் கொள்முதல் குறைந்துள்ள போதிலும், தமிழகத்திடம் போதிய அளவில் அரிசி கையிருப்பு உள்ளதால், அரிசி தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் இல்லை என்று உணவுத்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். தமிழக நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் மத்திய அரசின் ஒதுக்கீடு (இந்திய உணவுக் கழகம் வழங்கும் நமது மாநிலத்துக்கான பங்கு) ஆகியவற்றை சேர்த்து, தமிழகத்தில் பொது வினியோகத்துக்காக தற்போது 7 லட்சம் டன் அரிசி கையிருப்பில் உள்ளது. இது 2 மாத கால வினியோகத்துக்கு போதுமானது. எனவே, நெல் கொள்முதல் குறைந்துள்ளதால், அரிசி பற்றாக்குறை ஏற்படக் கூடும் என்ற அச்சம் தேவையில்லை என்று அதிகாரிகள் நம்பிக்கை ஊட்டுகிறார்கள்.*